உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 34 | இராக்ஷச - புரட்டாசி - 10—10—75 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## கண்ணில் மறைந்தாலும் கருத்தில் நிறைந்துள்ள

## — கயிலைக்குருமணி —

திருவருள் உறைப்பு :

தருமையாதீன அருளாட்சியில் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து கயிலை கண்டு வெள்ளிவிழாக்கொண்டு தருமையாதீனத்தின் புகழைப் பொன் ஏட்டில் பொறித்துச் சென்ற ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இறைவன் திருவடி நீழலில் இரண்டறக் கலந்து நான்காண்டுகள் நிறைகின்றன. திருவருள் அழைப்பால் காசியம்பதிசென்று, காசியம்பதியை அடைந்த சிலமணிநேரத்தில் இறையடியில் இணைந்த அவர்கள் திருவருள் உறைப்பையும், தருமையாதீன அருளாட்சியில் அவர்கள் இயற்றிய அரும் பெரும் பணிகளையும் நினைவு கூர்வதும், சிந்திப்பதும் நமக்கெல்லாம் அவர்கள் காட்டிய வழியில் நடந்துசெல்லும் வலிமையையும், செயலார்வத்தையும் தூண்டுவனவாக அமையும்.

இருபத்தாறரை ஆண்டுக்கால அருளாட்சியில் அவர்கள் செய்த அரும் பெரும் பணிகளை விரிப்பின் பெருகும். தொகுப் பின் எஞ்சும்.

தண்ணிலவும் – தாரகைகளுமாக விளங்கும் தருமையாதீன மும், தருமையாதீனத் திருக்கோயில்களும், தூய்மையின் இருப்பிட மாகவும், நிர்வாகச் சிறப்பின் பிறப்பிடமாகவும் உயர்ந்தோங்கின.

### கோயில் புதுக்கிக் குடமுழுக்கு :

ஏறத்தாழ இருபத்தேழு ஆண்டு அருளாட்சிக்காலத்தில், ஆதீனத்திற்குட்பட்ட இருபத்தேழு திருக்கோயில்களையும், பல லட்சம் ரூபாய்ப் பொருட் செலவில் திருப்பணிகள் செய்து புதுப் பித்துக் குடமுழுக்குச் செய்வித்த கயிலைக் குருமணி அவர்களின் கருணைத்திறம் அவர்களின் பக்திக்கும் – செயல் திறனுக்கும் ஆட்சித்திறனுக்கும் மங்காத புகழ் சேர்ப்பன. தமிழ்நாட்டிலும் பிற இடங்களிலும் உள்ள பல்வேறு ஆலயங்களில் நடைபெற்ற குடமுழுக்குகளுக்கும், திருப்பணிகளுக்கும் பல்லாயிரம் பல்லாயிர மாக நிதி அளித்துள்ளது நினைவுகூரத்தக்கது.

'உன்னைச் சிங்காரித்து உனதழகு பாராமல், என்னைச் சிங்காரித்து இடர்ப்பட்டேன்' என்ற குருஞானசம்பந்தர் வாக்கை நினைந்து, ஆதீனத் திருக்கோயில் இறையவர் திருமேனி களுக்கு வெள்ளியாலும், தங்கத்தாலும் விலை மதிப்பற்ற நவரத்தினங்களாலும் கவசங்கள் செய்வித்தும், இறைவன் திரு வீதியுலாவர வாகனங்கள் புதுப்பித்தும் இறையழகு கண்டு மகிழ்ந்தார்கள்.

சமயம் மக்களின் அகவுணர்வுகளைச் செம்மைப்படுத்துவ தோடு, புறத்திலும், சமுதாய மக்களின் துயர் துடைக்கவும் வேண்டும் என உணர்ந்து திருக்கோயில்களின் சார்பில் சித்த மருத்துவமனை, திக்கற்ற சிறுவர்களுக்கு அன்பில்லம், மகப் பேற்று மருத்துவமனை, யாத்திரீகர்களுக்குத் தங்கும் விடுதிகள் முதலியன அமைத்து உலகியல் நெறியும் புரந்தார்கள்.

### உரைநலம் பெற்றன திருமுறைகள் :

தெய்வநலங்கொழிக்கும் சைவத்திருமுறைகளுக்கு முறையாக உரை நலங்காணச்செய்தும், திருக்குறளுக்கு உரைவளம்தொகுப் பித்தும் அவற்றை அச்சேற்றி, அனைவரும் பெற்றுப் பயனுறும்

வண்ணம் அவற்றை அடக்க விலைக்கும், இலவசமாகவும் வழங்கச்செய்தார்கள். மேலும் செந்தமிழ் அறநூல்களும், சாத்திரங்களும் புராணங்களும் என அடுத்தடுத்து நானூற்றுக்கும் மேற்பட்ட நல்ல தமிழ் நூல்களையும் – ஆங்கில நூல்களையும் அவர்கள் அருளாட்சியில் தென்னாட்டில் பல இடங்களில் மக்கள் பெற்று மகிழ்ந்தனர். உலகம் முழுவதுமுள்ள பல பெரிய நூல்நிலையங்களில் இவை இப்போது அணி செய்து வருகின்றன.

சமய வளர்ச்சியில் புதிய முயற்சிகள் :

சென்னையில் சமயப் பிரசார நிலையம் அமைத்துத் தமிழ் நாட்டின் தலைநகரில் சமயப் பயிர் வளர்த்ததோடு, எண்ணற்ற சமயக் கூட்டங்கள், சாத்திர தோத்திர மாநாடுகள், கோடைக் கால சமயப்பயிற்சி வகுப்புக்கள் முதலியவற்றைத் தென்னாட்டின் பல பகுதிகளிலும் நடத்துவித்தருளினார்கள். இதனால் மக்களின் அக இருள் நீங்கி, சமய உணர்வு செழித்தது.

'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' என்ற ஞானசம்பந்தர் அருள்வாக்கிற்கு ஒப்ப, கற்றுச்சிறக்க நூல்கள்வெளியிட்ட தோடு, திருமுறைப் பாடல்களை இசைத்தட்டுகளில் தக்கவர்களைப் பாடச் செய்து, பதிவாக்கி உலகிற்கு வழங்கியருளினார்கள். இன்றைக்கு வெளிவரும் தெய்வீகப் பாடல் இசைத்தட்டுகளுக்கு அவர்களே முன்னோடியாக வழிகாட்டியருளினார்கள் என்பது பொருந்தும்.

இன்று அன்னை அபிராமியின் திருவருள் சக்தி உலகெலாம் விளங்கவும், ஆயிரமாயிரம் அடியார்கள் குழுக்குழுவாக அன்னை அபிராமியம்மையைத் தரிசிக்கவும், அன்று கயிலைக் குருமணி அவர்கள், அபிராமி அந்தாதியைப், பதிப்பித்தும், பாடச்செய்தும் ஊக்கமூட்டியதே காரணமாக அமைந்தது என்பதை உலகினர் அறிவர்.

குருமரபு விளக்கிய திருவுள்ளம் :

சைவத்திருமரபு விளங்கச் செய்த தொண்டுகளுக்கு ஈடாக ஆதீனக் குருமரபு விளங்க அவர்கள் செய்த திருப்பணிகளும் பலப் பலவாக அமைந்தன.

தருமையாதீனக் குருமகாசந்நிதானங்களின் குருமூர்த்தங்களை அழகிய திருக்கோயில்களாக எடுப்பித்து, நாளும் நியமமாக வழிபாடுகளை நிகழ்த்துவித்துத் தருமையாதீனக் குருமரபு விளக்கியருளினார்கள்.

தமக்குப் பின்னரும் குருமரபு துலங்க, நல்ல சீடர்களைத் தேர்ந்து கல்வி, அறிவு, ஒழுக்க, ஞானங்களில் அவர்களைப் பயிற்றிய பெருமை அவர்களுக்கு உண்டு இன்று, தருமையாதீனத்தின் 26 ஆவது குருமணியாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், குன்றக்குடி, ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகளும் ( குன்றக்குடி அடிகளார் ), திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித்தம்பிரான் சுவாமிகளும், மற்றும் ஆதீனத் திருக்கோயில்களில் திருவருட்பணி செய்யும் திருக்கூட்டத்து அடியவர் பலரும் அவர்களது கருணையில் வளர்ந்த ஞானமலர்களேயாவார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு திருமடங்களின் தலைவர்களை எல்லாம், தனித்தனியே அழைப்பித்து, அவர்கள் கருத்தறிந்து, பின் அனைவரையும் ஒன்றுகூட்டித் தமிழ்நாடு தெய்விகப்பேரவையைக் கண்டதோடு, அதன் தலைவராகவும் அமர்ந்து அவர்கள் செய்த நல்லறப் பணிகள் நமது முன்னேற்றத்திற்கு வழிகோலியது.

**கல்விக்கண் திறப்பித்த கருணை வளம் ;**

செந்தமிழும் – சிவநெறியும் தமதிருகண்களாகக் கருதிய கயிலைக் குருமணி அவர்கள் சிவநெறிவளர்ச்சியோடு அமையாது, செந்தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளும் அளவற்றன.

ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், ஏனையோரும் செந்தமிழ்க் கல்வி பயில்வதற்காக அவர்கள் தொடங்கிய தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, சமய அறிவும் – நல்லொழுக்கமும் மிக்க அறுநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ப் புலவர்களை உலகுக்கு வழங்கி வெள்ளி விழாக் கண்டு வளர்கிறது. தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரால் உயர்பள்ளியும் தமதுகனகாபிஷேகநினைவாகத் தருமையில் சைவசித்தாந்தக் கல்லூரியும் அமைத்துப் புரந்தார்கள். 24வது குருமூர்த்திகளால் தோற்றுவிக்கப்பெற்ற ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, வேத சிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலை முதலிய கல்வி நிலையங்களையும் போற்றிப் புரந்தருளினார்கள்.

**தலயாத்திரைகளில் தணியாத ஆர்வம் :**

'மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்ற தாயுமானார் பாடல், சாதாரண நிலையில் உள்ளவர்கள் இம்மூன்று நிலையிலும் தரிசித்து மீண்டால் குருநாதனின் உபதேசத்தைப் பெறத் தகுதி பெறுவர் என விளக்குகிறது. ஆனால், கயிலைக்

குருமணி அவர்களோ, தாம் அருளுபதேசம் செய்யும் ஆசாரிய நிலையிலிருந்தும், மூவர் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் முழுவதையும் சென்று தரிசித்த செயல் நம்மனோர்க்கு வழிகாட்டுதற்காகவே என்பது புலப்படுகிறது. மேலும், மாதந்தோறும் தம் ஜன்ம நட்சத்திரத் திருநாட்களில் ஒவ்வொரு பாடல்பெற்ற தலத்தின் பதிகத்தையும் அச்சிட்டு அன்பர்களுக்கு வழங்கியருளினார்கள்.

கனகாபிஷேகம் கொண்ட கயிலைக் குருமணி :

தென்னாட்டுத் திருத்தலங்களோடு, பாரத புண்ணிய பூமியிலுள்ளவைகளையும் அதற்கப்பாலுமுள்ள தலங்களையும் தரிசிக்கும் விருப்புடன் பெரிய யாத்திரைகள் பல மேற்கொண்டு அரிய வழிகளை எல்லாம் கடந்து ஜோதிர்லிங்கத் தலங்களையும், வடநாட்டின் பிற சிவதலங்களையும் தரிசித்ததுடன், திருக்கயிலாய தரிசனமும் செய்து மகிழ்ந்தார்கள். கயிலை கண்டு, திருக்கயிலாய பரம்பரை என்பதை மெய்ப்பித்த குருமணி அவர்களுக்கு அன்பர்கள் தருமையில் கனகாபிஷேகம் செய்து மகிழ்ந்தனர். அது முதல் அவர்கள் "கயிலைக் குருமணி" என்றே உலக மக்களால் அழைக்கப்பெற்றார்கள். 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற எண்ணத்தால், தாம் மேற்கொண்ட யாத்திரைகளைத் தக்கார்களைக் கொண்டு எழுதச் செய்து, யாத்திரை நூல்களாக வெளியிட்டு, இவ்வாறான யாத்திரையை மேற்கொள்பவர்க்கு ஊன்றுகோலாக அவற்றை வழங்கியருளினார்கள். தாம் யாத்திரைக்கு எழுந்தருளும்போதெல்லாம் அன்பர்கள் பலரையும் உடன் அழைத்துச் சென்று அவர்களும் அந்த இன்பத்தைப் பெறச்செய்து மகிழ்ந்தார்கள்.

கொற்றவைத் தாய்க்கு ஓர் கற்றளி :

தாய் வழித் தந்தை என்பது போலச் சக்தி வழிபாட்டின் வாயிலாகச் சிவத்தை அடைந்து உலகம் உய்திபெறப்பதினெண் திருக்கரங்களோடு, மகாலட்சுமி அம்சமும், கொற்றவை அம்சமும் பொருந்த, ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காம்பிகையைத் தருமையில் எழுந்தருள்வித்து, உலக நலங்கருதி விசேடப் பெருவேள்விகள் நிகழ்த்துவித்தார்கள். தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவில் 'வனதுர்க்கை' பிரதிஷ்டையும் அவர்கள் காலத்தில் நடைபெற்றது. உலகம் வாழ வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரிக் காலங்களில் சதசண்டியாகங்கள், இலட்சம் கோடி அர்ச்சனைகள் செய்வித்தருளினார்கள்.

எண்ணத் தொலையாத எழுச்சிப் பணிகள் :

தருமையாதீனத் திருக்கோயில்களில் கோடி அருச்சனையை முதன் முதலாகத் தொடங்கி வைத்து, ஏனைய திருக்கோயில்களிலும் இவ்வகை நடைபெற வழி காட்டிய கருணைத்திறம் கயிலைக் குருமணி அவர்களுக்கே உரியது.

ஆண்டுதோறும் கந்தசஷ்டி நாட்களில் திருச்செந்தூர் சென்று மௌன விரதம் மேற்கொண்டு, செந்திலாண்டவன் திருவடிதொழும் நியமமும், வாரந்தோறும் வியாழக்கிழமையில் மௌன விரதம் கொண்டு குருவருள் விளக்கும் அமைவும் அவர்களது பக்திவைராக்கியத்தை உலகவர்க்கு உணர்த்தின.

'வலது கை கொடுப்பதை இடது கை அறியாது' என்பது போல ஆரவாரமின்றி கல்வி நிலையங்களுக்கும், இயற்கையின் சீற்றத்தால் துயருற்ற மக்களுக்கும், அரசினரின் ஆக்கப் பெரும் பணிகளுக்கும், அவர்கள் வழங்கியிருக்கும் பெருங் கொடை அளவற்றதாகும்.

திங்கள் தோறும் திருவருட் குறிப்பினால் உள்ளத்தெழுந்த ஞான உணர்வுகளை, உலகினர் பெற்று இன்புற தருமையாதீனத் திங்கள் இதழாகிய 'ஞானசம்பந்தத்'தின் வாயிலாகக் 'குருவருள்' என்ற தலைப்பில் வழங்கிய அறிவுக் கொடை உலகினர்க்குப் பெருவிருந்தாகியது.

ஆன்மார்த்த மூர்த்தியாகிய செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமானுக்குகந்த ஆவணிமூலத் திருநாளில், பல்துறை அறிஞர்களுக்குப் பட்டங்கள் வழங்கிப் பாராட்டியும், சீகாழி திருமுலைப்பால் திருவிழாவிலும் திருவாரூர் ஸ்ரீ அப்பர் ஆலயத்தில் சித்திரைச் சதயத்திலும் ஓதுவாமூர்த்திகளுக்குப் பொற்கிழி வழங்கி ஆசீர்வதித்தும் உயர்த்தியவர்கள்,

இன்னும் எண்ணில் அடங்காத பல்வேறு நிலைகளில் அவர்கள் ஆற்றிய செந்தமிழ்ச் – சிவநெறிப் பணிகளை முற்றும் தொகுத்தற்கு இங்கே இடமும் இல்லை: இயல்வதும் அமையாது.

ஆழப்பதிந்த அடிச்சுவடுகள் :

அன்பு கனிந்த நெஞ்சம்; கண்டாரை ஈர்க்கும் திருமுகப் பொலிவு; வழங்கிச் சிவந்த கரங்கள்; பிறர் துயர் துடைக்கும் நல்லெண்ணம்; ஐயன் திருவடிகளில் அன்பு; உளம் நிறைந்த திருமுறைப் பனுவல்கள்; அடக்கமான அமைதிப் பேச்சு; இந்த

அமைப்புக்களின் முழுக் கூட்டாக விளங்கிய கயிலைக் குருமணி அவர்கள் இறையடி நீழலில் கலந்து ஆண்டுகள் நான்கு நிறைகின்றன. ஆயினும், அவர்கள் அடிச்சுவடும், எண்ணமும் தொடங்கிய தொண்டுகளும் தருமையில் மட்டுமின்றித் தமிழகமெங்கணும் நிறைந்தே நிற்கின்றன. காலத்துக்கேற்ற ஒரு மரபை அடிச்சுவட்டை உருவாக்கிப் பிறர் பின்பற்ற விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

கயிலைக் குருமணி உருவாக்கிய ஞானமலர் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் வழித்தோன்றலாம் அவர்கள் உருவாக்கிய ஞானமலராய், கல்வி அறிவு ஒழுக்கங்களின் இருப்பிடமாய் இன்று தருமையாதீன 26 ஆவது குருமகா சந்நிதானமாக ஞானபீடத்தை அலங்கரிப்பவர்கள், ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். கயிலைக் குருமணி அவர்கள் இட்ட பாதையிலேயே தமது அருளாட்சிப் பயணத்தைத் தொடரும் குருமணி அவர்கள் அளவற்ற குருபக்தி யுடையவர்கள். கயிலைக் குருமணி அவர்களின் நினைவில் நெகிழ்பவர்கள். 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்ற குறள் வரிக்கு இலக்கியமாக விளங்குபவர்கள்,

காசியம்பதியில் அவர்கள் பரிபூரணம் எய்தியமையை நினைந்து, காசி விசுவநாதர் திருக்கோயில் அமைப்பில், தமது குருநாதரின் திருக்கோயிலைக்கட்டுவித்து, ஓராண்டுக்குள்ளேயே நிறைவுசெய்து குடமுழுக்குச் செய்வித்து நாடோறும் குருமூர்த்த வழிபாடு நிகழ்த்தும் நியமமுடையவர்கள்.

அஞ்சலித்து ஆன்மீக ஒளி பெறுவோம் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் நான்காவது ஆண்டுக் குருபூஜை விழாவை இவ்வாண்டும், அக்டோபர்மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமையன்றுமிகச் சிறப்பாகத் தருமையிலும், மாயூரம்தெய்வத்தமிழ்மன்றத்திலும் அவர்கள்முத்திப்பேறெய்திய ஸ்ரீ காசி ஸ்ரீ குமாரசாமி மடத்திலும் கொண்டாடத் திருவுளம் பாலித்துள்ளார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துவோமாக ! அவர்களுடைய ஆன்மீக ஒளி எங்கும் பரவி நம்மையும் நாட்டையும் உய்விக்கப் பிரார்த்திப்போமாக !

வாழ்க கயிலைக் குருமணியின் புகழ் !

வளர்க தருமையாதீனம் !

உ

குருபாதம்

## தருமையாதீனம் ஆவணிமூலப் பெருவிழாவில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

### ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

13—9—75

" நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே.

( திருவாசகம் – ஆனந்தமாலை – 7. )

## உழைப்பவரை உயர்த்தும் திருநாள் :

இன்று ஆவணிமூலத் திருநாள். நமது ஆதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகத் திகழும் சொக்கநாதப் பெருமான் தம் அடியார்களை எந்த எந்த வகையில் ஆட்கொண்டருளினன் என் பதனைச் சிந்திக்கும் திருநாள். உழைக்கின்ற உத்தமர்களை உயர்த்த – இறைவன் தம்திருமுடியில் மண் சுமந்தும் – திருமேனியில் புண் சுமந்தும் உய்வித்த பெருநாள். உழைப்பினையும் – உண்மைத் தொண்டினையும் போற்றவும் – ஒப்பற்ற சிவபெருமானின் பெருங்கருணையினை நினைந்து போற்றி வழிபடவும், நல்ல தொண்டரைப் பாராட்டி வாழ்த்தவுமே இந்த ஆவணிமூலத் திருநாளைக் கொண்டாடுகின்றோம்.

## வழிபாடாவது யாது ?

வழிபாடு என்றால் என்ன ? இறைவன் உயிர்களுக்குச்செய்து வரும் பேருபகாரங்களை நன்றியுணர்வுடன் மனத்தால் நினைப்பதும், வாக்கால் வழுத்துவதும், காயத்தால் ( உடலால் ) தொழுதலுமே வழிபாடாகும். தாவரம் முதல் தேவர்வரையுள்ள பிறவிகளை-உருவங்களை- இயங்கும் ஆற்றல்களைக்கொடுத்து உயர்த்தியுள்ளான் இறைவன். இவற்றைப் பெற்ற நாம் இன்று பெற்றுள்ள வளர்ச்சிக்கான காரணங்களை இறைவன் சந்நிதியில் நின்றுமனம்உருகி ஒருகணமேனும்நினைத்துப்போற்றுதல்வேண்டும். அதுவே, சிறந்த வழிபாடு. இதனைத்தவிர நம்மை வாழ்வித்துவரும் வள்ளலாகிய இறைவனுக்கு நாம் செய்யும் வழிபாடு வேறில்லை. உயிர்களிடமிருந்து நன்றியுணர்வைக்கூட இறைவன் எதிர்பார்ப்பதில்லை. சிறந்த மனிதர்களே தாம் செய்த உதவிகளுக்கு நன்றியை எதிர்பார்ப்பதில்லை என்றால், கருணாமூர்த்தியாக - வேண்டுதல் வேண்டாமை இலாதவனாகத் திகழும் பரமேசுவரன் உயிர்களிடமிருந்து நன்றியை எதிர்பார்ப்பானா ? எதிர்பார்க்கமாட்டான். ஆயினும், நன்றி பாராட்டுதல் பாராட்டுபவனது பண்பை உயர்த்திப் பலனடையச்செய்கிறது.

## நால்வகைத் தீட்சைகள் :

கருணாமூர்த்தியாக விளங்கும் இறைவனை வழிபட்டு அவன் அருள்பெற இன்றியமையாதது சமய தீக்ஷை. அதை ஆசாரியன் மூலமே பெறவேண்டும்.

ஆசாரியன் - அடியார்களுக்கு ஞானத்தை அருளிச்செய்யும் முறைகள் பலவாகும். இவற்றைத் தீட்சைகள் எனக் கூறுவது சாத்திர மரபு. கண்ணால் பார்த்தே அருள் செய்தல் ஒன்று. இதனை நயன தீட்சை என்பர். இதற்கு உதாரணமாக மீனைக் கூறுவர். மீன் தன் முட்டைகளை நீர்நிலைகளின் ஓரப்பகுதிகளில் இட்டுவிட்டுக் கண்ணால் பார்த்துக்கொண்டிருக்குமாம். அதன் பார்வைக் கனிவிலேயே முட்டைகள் பக்குவம் பெற்று குஞ்சு பொறிக்கும். செந்தமிழ்ச்சொக்கனின் பாகத்தமர்ந்த அம்மை, தம் கண் பார்வையாலேயே உலகத்துயிர்களை உய்வித்தருளுகின்றாள் என்ற கருத்திலேயே மீனாட்சி என அழைக்கப்பெற்றாள்; மீனாட்சி என்பதற்கு மீன் போன்ற அட்சங்களை - கண்களை உடையவள் என்பது பொருள்.

கையால் தீண்டி ஞானம் வழங்குவது 'ஸ்பரிச தீட்சை' எனப்பெறும். இதற்குக் கோழி, முட்டைகளைத் தீண்டி அடைகாத்தலை உவமை கூறுவது வழக்கம்.

மனத்தால் நினைந்து ஞானம் அருளுவது ஒருவகை. இதனை 'மானத தீட்சை' என்பர். இதற்கு ஆமையை உதாரணம் கூறுதல் வழக்கு. ஆமை, ஓரிடத்தில் முட்டையை இட்டுவைத்து விட்டு, எங்கேனும் ஓரிடத்திலிருந்து அருளோடு நினைக்கும். நினைத்தவுடனேயே முட்டை வளர்ச்சியுற்றுக் கருவுயிர்க்கும். இதுபோல், நாம் பெற்றிருக்கும் பேறுகளை நினைந்து - இவற்றை வழங்கிய ஆண்டவனை நினைந்தால், அவன் உள்மகிழ்ந்து அன்பர்களை நினைத்தருளுவான். ஆமை நினைவுபோல ஐயன் நினைவால் அடியார்கள் வாழ்வுறுவர்.

சொற்களால் - உபதேசத்தால் ஆசாரியன் அன்பர்களுக்கு ஞானம் வழங்குவது உண்டு. இதனை 'வாசிக தீட்சை' என்பர் சான்றோர்.

## கடமைப் பணியும் வழிபாடே :

மாந்தர்கள் தத்தம் கடமைகளை ஒழுங்காகச் செய்வதே இறைவனுக்கு உகந்த வழிபாடாகும், மற்றவர்கள் கடமை தவறாது நடக்கவேண்டும் என்று கருதுபவர்கள், தாம் முதலில் நடந்துகாட்டவேண்டும். இறைவன் இந்தநியதியைத் தானே மேற்கொண்டுள்ளான். உலகத்தின் இயக்கமும், இரவு பகல் களின் தோற்றமும் இதனை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. இயற்கையின் நியதிகள் ஒவ்வொன்றும் இறைவனின் கடமையை விளக்குகின்றன.

பரமேசுவரன் கடமை தவறுபவர்களைத் தண்டிக்கின்றான். அதன் நோக்கம் அவர்களை வருத்தவேண்டியன்று அவர்களைக் கடமையில் செலுத்தவே என்பதனை உணரவேண்டும். இதனை,

" நல்ல குருநாதன் நம்மை வருத்துவது
கொல்ல அல்ல - பொல்லாக் குணம்போக்க "

என்ற பழம் பாடல் வரிகள் நன்கு விளக்குகின்றன.

## வினவும் விடையும் :

நமது ஆதி குருமூர்த்திகள், தமது ஆன்மநாயகனாகிய சொக்கநாதப்பெருமான்மீது அருளிய பாமாலைகளின் தொகுதி 'சொக்கநாத வெண்பா' என்னும் தோத்திர நூல். இதில் அவர்கள் அருளிச்செய்த இருபாடல்கள் இக்கருத்தை விளக்கு கின்றன. கடமையைச் செய்யும் அன்பர்களை வாழ்விப்பதும், அதனைச் செய்யாதவர்களைத் தண்டிப்பதும் உன் கருத்தானால், உன்னை எல்லாம்வல்ல சித்தர் என்று கூறுதல் எப்படிப்பொருந் தும்? எல்லாம்வல்லவரானால் தீயவர்களையும் ஆட்கொள்ளுதல்

வேண்டாவோ எனக் கேட்டுச் சிவபெருமானின் கருணைத் திறத்தை விளக்குகின்றார் ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

> " அன்பர்க் கருள்புரிவ தல்லாமல் தேவரீர்
> வன்பர்க் கருள்புரிய மாட்டீரேல் – உம்பர்தொழும்
> நல்லார் புகழ் மதுரை நாதரே – தேவரீர்க்(கு)
> எல்லாமும் வல்லசித்த ரேன்? "

பரமேஸ்வரனின் அருளிப் பாட்டை ஐயுறுவது போல இப் பாடலை அருளிச் செய்த ஸ்ரீ குருஞானசம்பந்தர், உலகத்தில் பெரும் பாதகம் புரிந்தவர்களையும், தவறு உணர்ந்தகாலையில் ஆட்கொண்டு அவர்களையும் வாழ்வித்த பெருமானின் பெருங் கருணையை நினைந்து, அதனைத் தம் மேல் ஏறிட்டுக் கொண்டு, என் போன்ற அன்பற்றவர்களையும் ஆட்கொண்டருளும் கருணையை நினைந்தால் நீ எல்லாமும்வல்ல சித்தர்தான் என்பது நன்கு புலப்படுகிறது எனப் பேசுதல் அவர்களது, இறையருள் தெளிவைப் புலப்படுத்துகின்றது.

> " என்போல் மலகடினர் எவ்விடத்துங் கண்டதுண்டோ
> இன்பே மதுரைக் கிறைவனே–அன்பேதும்
> இல்லா(த) எனையாண்ட எண்ணத்தால் தேவரீர்
> எல்லாமும் வல்லசித்த ரே "

என்ற பாடல் அவரது இறையருள் திறத்தைப் புலப்படுத்துவது காணலாம்.

## தவறும் – தண்டனையும் :

ஆவணிமூலத் திருநாள் தம் திருவடியில் அன்பு வைத்த மாணிக்கவாசகரையும், வந்தியம்மையையும் பரமேஸ்வன் ஆட்கொண்டருளிய கருணைத் திருநாள். எவ்வளவு சீரடியாராயினும் அவர்களும் தவறு செய்யும் போது தண்டனை தருவதை இறைவன் தவிர்ப்பதில்லை. அமைச்சர் என்ற நிலையில் குதிரை வாங்குவதற்கு என்று எடுத்துச்சென்ற அரசாங்கப் பொருளை கோயிற் பணிக்குச் செலவிட்டார் மணிவாசகர். அக் குற்றத்திற்காகச் சுடுமணலில் நிறுத்தி உலகியல் நிலையில் தண்டனை தருகிறான் அரசன். அருள் நிலையில் திளைக்கும் மணிவாசகர் அரச தண்டனையைத் துன்பமாகக் கருதாது இறையருளாகக் கருதினர். ஆயினும் ஆண்டவன், அவர் செயல் தம் செயலே என்பதை உலகினர்க்கு மெய்ப்பிக்க வைகையைப்பெருகி வரச்செய்தும் நரிகளைப் பரிகளாக்கியும் மணிவாசகரை அரச

தண்டனையினின்றும் காக்கின்றான். இதற்குக் காரணம், மணி வாசகர், அரசாங்கப் பொருளைச் செலவிட்டகாலை தன் செயலற்று இறையுணர்வு வயப்பட்டு நின்றமையேயாகும்.

## பட்டமளிப்பு விழா :

இத்தகு கருணையாளனாகிய சொக்கநாதப்பெருமானுக்கு உகந்த ஆவணிமூலத் திருநாளை இன்று இங்கே சிறப்பாகக் கொண்டாடுகின்றோம்.

நமது, தருமையாதீனம் 400 ஆண்டுக்காலமாகச் சைவப் பயிர் வளர்த்து வருகிறது. கயிலைக்குருமணி அவர்கள், சைவ – சித்தாந்தம், இலக்கியம் விஞ்ஞானம் முதலிய துறைகளில் நல்ல பணி ஆற்றிய அறிஞர்களுக்கு ஆவணி மூலத் திருநாளில் பட்டமளித்து ஊக்குவிக்கும் முறையை 25 ஆண்டுகளுக்கு முன் தொடங்கி வைத்தார்கள். ரா. பி. சேதுப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் மற்றும் பலர் சொக்கநாதன் திருவருள் பெற்றவர்கள்.

இன்று நமது சொக்கநாதப் பெருமானின் திருவருளால் இன்று பட்டம் பெறும் அன்பர், சங்கரநாராயணன் அவர்கள், மதுரைத் தியாகராயர் கல்லூரியில் 'சித்தாந்தப் பேராசிரிய' ராகப் பணியாற்றுபவர். நமது மதுரைத் திருமடத்தில் சைவ – சித்தாந்தக் கருத்துக்களையும், புராண – இதிகாசங்களையும் வகுப்புக்கள் வாயிலாகச் சில ஆண்டுகளாக விரிவுரை செய்து வரும் நல்ல தொண்டர். இவர் பணியாற்றும் தியாகராயர் கல்லூரியைத் தோற்றுவித்த திரு தியாகராஜச் செட்டியார் தொழில் மேதையாகவும், சமயப் பற்று மிக்கவராகவும் இருந்ததோடு சைவசித்தாந்தத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கியவர். இவர் தொடங்கி நடத்தும் கல்லூரியில் பணியாற்றும் தமிழறிவும் – சமயப் பண்பாடும் கொண்ட அன்பர் சங்கரநாராயணன் அவர்களுக்குச் செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான், திருவருளால் 'சைவ இலக்கியச் செம்மல்' என்ற பட்டத்தை இன்று வழங்குகின்றோம்.

பட்டம்பெற்ற அன்பர்க்கும், மற்றும் இங்கே குழுமியுள்ள அன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலன்களும் பெருகச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

# திருமயேந்திரப்பள்ளித் தலச்சிறப்பு

சிதம்பரம் - மாயூரம் இரயில்பாதையில் கொள்ளிடம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே ஆச்சாள்புரம் என்னும் திருப்பெருமண நல்லூர் விளங்குகிறது. இத்தலத்திலிருந்து நான்குகல் தொலைவில்,திருமயேந்திரப்பள்ளி அமைந்துள்ளது. கோயிலடிப் பாளையம் எனவும் இத்தலம் வழங்கப்படுகிறது.

இறைவன் திருப்பெயர் திருமேனி அழகர். இத்திருப் பெயரை 'அழகன்' எனவும் 'அந்தமில் அழகன்' எனவும் ஞானசம்பந்தர் இத்தலப் பதிகத்துள் குறிப்பிடுகின்றார். இறைவியின் திருப்பெயர் வடிவாம்பிகை சூரியன் சந்திரன் பிரமன் இந்திரன் ஆகியோர் வழிபட்டு அருள் பெற்றனர் என்பது தல புராண வரலாறு.

தலபுராணங்கள் பலவற்றுள் உமையம்மை, விநாயகர் முருகன், திருமால், நான்முகன், சூரியன், சந்திரன் இந்திரன் முதலான தேவர்கள், கலைமகள், திருமகள், முனிவர்கள் முதலியோர் இறைவனை வழிபட்டு அருள்பெற்ற வரலாறுகளும் விலங்குகள் நீர் வாழ்வன ஊர்வன பறப்பன ஆகியனவும் இறைவனை வழிபட்டு முத்தி பெற்ற வரலாறுகளும் கூறப்படும். தேவாரத் திருமுறைகள் இத்தல புராண வரலாற்றினையும் குறிப்பிட்டு இறைவனைப் போற்றுவதைப் பல இடங்களில் காணலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புன்கூர்த் திருப்பதிகத்தில் தலபுராண வரலாற்றைக் குறிப்பிட்டு அத்தலப் பதிகத்துள் போற்றியுள்ளார்.

"இயக்கர் கின்னரர் யமனெடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப் பொன் றின்றி நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூர் உளானே"

என்பது சுந்தரர் திருவாக்கு. தேவர்கள் பலரும் வழிபட்டு அருள் பெற்ற வரலாறும் நம்மினும் இழிந்த விலங்கு பறவை முதலானவை வழிபட்டு நலமுற்ற வரலாறும் நம்மை அவ்விறைவன் வழிபாட்டில் ஈடுபடுத்த உதவும் வரலாறுகளாகும். இத்தலப் பதிகத்துள் வரும் பாடலில் ஞானசம்பந்தர்,

"சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபட இருந்தஎம் இறையவன்
யந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்த மில் அழகனை அடிபணிந் துய்மினே"

என்று இத் தல புராண வரலாற்றினைக் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.

இத்தல விருக்ஷம் வில்வம். தீர்த்தம் - இந்திர தீர்த்தம். இது கோயில் திருமுன் உள்ளது. இதில் ஒரு மண்டலம் நீராடி வழிபட்டோர் நோய் நீங்கி இன்புறுவர்.

சுவாமி கிழக்கு பார்த்த சந்நிதி. அம்பிகை தெற்கு நோக்கிய சந்நிதி. சுவாமி அம்பாள் திருவுருவங்கள் பெயருக்கு ஏற்ற முறையில் மிக்க அழகுடன் திகழ்கின்றன. திருஞானசம்பந்தர் உற்சவ விக்ரகம் நிறைந்த பேரழகுடன் திகழ்கிறது.

தென்கிழக்கில் மாரியம்மன் கோயில் தென்மேற்கில் இராம லக்ஷ்மணர் திருக்கோயில் திரௌபதி அம்மன் கோயில், தீர்த்தத்தின் வடகரையில் ஐயனார் கோயில் விளங்குகின்றன. கோவிலுக்குக் கிழக்கில் ஒருகல் தொலைவில் கடற்கரையும் வடக்கில் கொள்ளிட நதியும் விளங்குகின்றன.

"வம்புலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியுள்
நம்பனார் கழலடி ஞானசம் பந்தன்சொல்
நம்பரம் இதுவென நாவினால் நவில்பவர்
உம்பரார் எதிர்கொள வுயர்பதி யணைவரே.

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 34. இதழ் 9. பக்கம் 404 இன் தொடர்ச்சி )

சொன்னநால் வகையும் இன்றிச்
சொல்லிடும் பொருள்க ளெல்லாம்
என்னையோ! அறிகி லோம்; பித்
தேறியோ! வானம், ஆன்மா,
மன்னுகா லங்கள், திக்கு,
மனமுடன் வாக்கி றந்திட்
டுன்னுமோர் இறையும் உண்டென்
றுரைப்பது நித்த மன்றே. 75

## இதன் தெளிபொருள்

மேல் யாம் கூறிய உரு, அரு, வீடு, வழக்கு என்னும் நால் வகைப் பொருள்கள் தவிர வேறு சில பொருள்கள் உள்ளன வாகச் சிலர் கூறுவது என்னே! அவர்கட்குப் பித்து மிகுந் துள்ளதோ, என்னவோ! யாம் அறியோம். அவர்கள் 'ஆகாயம் ஒரு பூதம்' என்றும், மற்றும் 'காலம், திசை என்பன உள' என்றும், 'எல்லாவற்றுக்கும்மேலாய், மன வாக்குக்களைக் கடந்து 'கடவுள்' என்று ஒரு பொருள் உள்ளது, என்றும் கூறுவன வெல்லாம் ஆராய்ச்சிக்கு நிற்கமாட்டா.

## விளக்கம்

இவ்வாறு பொதுவாக இங்குக் கூறப்பட்ட மறுப்புக்களுக்குக் காரணங்கள் பின்னர்க் கூறப்படும். 12

ஈங்குவான் செயற்கு வாரா
    தியம்பிடும் பொருள்கள் எல்லாம்
தாங்குவான் உளதே யென்னில்
    தரித்திடா தருவ மாதல்;
ஓங்குவான் ஓசைக் காதி
    யெனில்அதங் குருவின் கூட்டம்,
நீங்குவான் இன்றி எங்கும்
    நின்றதேல் எங்கும் இன்றே 76

## இதன் தெளிபொருள்

ஆகாயம் உள்பொருளாயின், அதனால் யாதானும்ஒரு செயல் நடைபெற வேண்டும்; அவ்வாறு ஆகாயத்தின் செயலாக எதுவும் அறியப்படவில்லை. 'எல்லாப்பொருள் கட்கும் இடம் தந்து நிற்பது ஆகாயமேயன்றோ' எனின், 'ஆகாயம் ஏனைய பொருள் கட்கு இடம் தருகின்றது' என்றால் அதுவே பொருள்களைச் சுமப்பதாகும். 'ஆகாயம் உண்டு' என்பவர் அதனை 'அருவம்' என்றே கூறுதலால், அருவம் எவ்வாறு உருவப் பொருள்களைச் சுமக்கும்? இனி 'ஓசைக்குக் காரணமாய் உள்ளது ஆகாயமே' எனின், உருவப்பொருள் இரண்டும், பலவும் இயைந்து தாங்கினாலன்றி ஓசை உண்டாகாமையால், ஓசை உருவப்பொருளின் குணமாகுமன்றி, அருவப் பொருளாகிய ஆகாயத்தின் குணமாகாது. ஆகையால், 'ஆகாயம் அருவமாய் எவ்விடத்தும் நீக்கமற நிறைந்து நிற்கின்றது' என்றல், ஓரிடத்தும் இல்லாததனை எல்லா இடத்தும் இருப்பதாக மயங்கிக் கூறும் மயக்க உரையே.

## விளக்கம்

"அருவம் ஆதல்" என்பதில் ஆல் உருபு தொகுத்தலாயிற்று இதனால், ஆகாயம் உண்டு என்பாரது கூற்றுப் பொருந்தாமைக்குக் காரணம் கூறப்பட்டது. 13

(தொடரும்)

---

(சிறப்பு நாட்கள் தொடர்ச்சி)

15—11—75 சனி, வள்ளலார்கோயிலில் திருத்தேர்.

16—11—75 ஞாயிறு, கடைமுழுக்கு; தீர்த்தம். விருச்சிகரவி 43-7. விஷ்ணுபதி. புண்ணியகாலம். திருவையாற்றில் மாதப் பிறப்பு தீர்த்தம்.

---

குறிப்பு:— ஐப்பசி மாதத்தில் சுக்கிலபக்ஷப்ரதமை முதல் ஷஷ்டி முடிய சண்முகருக்கு உத்ஸவம் செய்யவேண்டும் என்று சிவாகமம் கூறுகிறது.

# திருப்பனந்தாள் அஜனீஸ்வரம்

வித்துவான், திரு. வே. மகாதேவன்

( மலர் 34, இதழ் 10 பக்கம் 446 இன் தொடர்ச்சி )

**முதற்பராந்தகன் கல்வெட்டு :**

அர்த்தமண்டப வாயிலின் தென்புறம் அமைந்துள்ள கல்வெட்டு முதற்பராந்தகசோழன் ஆட்சிக்காலத்தது. கல்வெட்டின் இடைப்பகுதி கட்டுண்டும் தேய்ந்தும் அழிவுற்றுள்ளது. இக்கல்வெட்டில்,

" சோழப் பெருந் — தேவி யார் தங்க —
ளாட்சி — யார் திருவாங் — கியார் இப்பூ —
மிக்குக் கிண — றும் இடுவி — த்து இப்பூ —
மி உந் திரு — த்து வித்து "

என்ற பகுதி அமைகிறது. இக்கல்வெட்டுச் சோம அரசியின்தாய் திருவாங்கியார் (அல்லது) தித்வங்கியார் என்பவள் இக்கோவின் பூமியைத் திருத்துவித்தாள்; கிணறு வெட்டுவித்தாள் எனக் கூறுகிறது. இத்திருப்பணிசெய்த பெண் முதற்பராந்தக சோழனின் பேரரசியின் தாயாக இருத்தல்கூடும். இக்கல்வெட்டு பூமியும் திருத்தினள் எனக் கூறுகிறது. 'பூமி' என்பதற்கு கோயிலமைந்த நிலம் எனப் பொருள் கூறலாம். உபபீடம் அதிட்டானத்துக்கு மேலமைந்த தளப்பகுதி தளம் என்றும் பூமி என்றும் கூறப்பெறும். 'பூமி' திருத்துவித்தாள் என இக்கல்வெட்டு, முதற் பராந்த சோழன் காலத்தில் திருவாங்கியாரால் இம்மாடக்கோயிலில் திருப்பணிகள் நடந்தமையைக் காட்டுகின்றது.

கல்வெட்டுக்கு எதிர்ப்புறத்துண்டின் மேற்புறம் அமைந்த கல்வெட்டு 'இராசகேசரி' என்னும் பொதுப் பெயரால் சோழ அரசனைக் குறிக்கும் மூன்றும் ஆட்சி யாண்டுக்கு உரியது. இக்கல்வெட்டில் கோராஜகேசரி பந்மற்கு யாண்டு 3 ஆவதில் வடகரைமண்ணி நாட்டுப் பிரமதேயம் திருப்பனந்தாள் மஹா சபையோம் இவ்வூர் திருவஜநீஸ்வரமுடையமஹாதேவற்கு...... என்ற பகுதியே படிக்க இயல்வதாக இருக்கிறது. நிவந்தம் கூறும் பகுதி மிகவும் தேய்வுற்று அழிந்துள்ளது.

இக்கல்வெட்டின்கீழ்,

"பூமியுந் திருவும் தாமேய் புணர்ந்துவிக்கிர — மத்தால் சக்கர நடாத்திய கோவிராச — கேசரி பந்ம ரான உடையார் ஸ்ரீ ராஜேந் — திர சோழ தேவற்கு யாண்டு 2 ஆவது — ராஜாதி ராஜ வளநாட்டு மண்ணி — நாட்டுத் திருப்பனந்தாள் திருவஜநீஸ்வர — முடையார்க்கு இதேவர் சிவப்பிராஹ் — மணன் காஸ்ய பநும் குமார......சிபாண்டனும் — தேவன் தாமோதிர னும் ஆகுயந் — கொற்றசிவனும் உள்ளிட்ட சிவபிரா — ஹ்மணரும் இத் தேவற்கு ஆசந்தி — ராதித்தவல் நாங் களும் எங்கள் வற்கத் — தாரும் திருநொந்தா விளக்கு இரவும் — பகலும் எரிக்கக் கடவோ மாக — ......... காட்டிருக்கும் கண — வதி ஆதித்தன் பக்கல் நாங்கள் — கொண்டகாசு முப்பது இக்காசு முப்பதும் — கொண்டு ஆசந்திராதித்தவல் திருநொந்தா — விளக்கு ஒன்று எரிக்கக் கடவோமாக இத் — தேவர் திருவாசல் திருப் படிக்கைக் கல் — வெட்டுவிச்சோம் — திருச்சிற்றம்பலம்

என்ற கல்வெட்டு அமைந்துள்ளது திருப்பனந்தாள் அஜனீச் வரத்துக்கு உரிய சிவாசாரியர் சிலர், 'ஆதித்தன் கணவதி' என்பவரிடம் இருந்து 30 காசு ஒரு திருவிளக்கு எரிக்க முதற் பொருளாகப் பெற்றனர்; இவர்களும் இவர் மரபினரும் தவரு மல் திருவிளக்கு எரிக்க ஒப்பினர். இக்கல்வெட்டிறுதியில் "திருச் சிற்றம்பலம்" என்னும் காப்புரை அமைந்துள்ளது.

## செஞ்சடையப்பர்கோயில் கல்வெட்டில்:

திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிலின், மடைப்பள்ளி யின் நுழைவுவாயிலின் வடபுற அருகால் நிலைக் கல்வெட்டு குலோத்துங்க சோழனின் 11 ஆவது ஆண்டுக்குரியது: இது திரு அஜன்ஈஸ்வரமுடையார் கோயிலைப்பற்றிக் குறிப்பிடுகிறது. சிதைந்த இந்தக்கல்வெட்டில் காஸ்யபகோத்திரத்தைச் சேர்ந்தவ ரான சிவாசாரியரான, காஸ்யபன் ஈஸன் பெரியான், காஸ்யபன் திருச்சிற்றம்பலமுடையான் பிச்சன் ... முதலியோர் அஜனீச்வரத் துக்குரிய சிவப்பிராமணராகக் குறிக்கப்பட்டுள்ளனர். இது இரண்டு திருவிளக்குகளுக்காகத் தரப்பெற்ற நிவந்தம்பற்றிக் குறிப்பிடுகிறது

## ஊருடையப்பர்கோயிலே அஜனீச்வரம்:

திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிலும் பிரமனால் பூசிக்கப்பெற்ற ஆலயந்தான். திருஞானசம்பந்தரின் திருமுறை

யும், முதற்பராந்தகசோழன் காலந்தொட்டமையும் எல்லாக் கல்வெட்டுக்களும், இதனைத் திருத்தாடகை ஈச்வரம் எனவே குறிக்கின்றன. அஜனீச்வரம் என யாண்டும் வழங்கவில்லை. ஊருடையப்பர் கோயில் கல்வெட்டுக்களில் 'அஜனீச்வரம்' என்னும் பெயர் அமைந்துள்ளது. எனவே ஊருடையப்பராலயமே அஜனீச்வரம் என்பது உறுதி.

## திருத்தாண்டகத்தில் திரு அஜனீச்வரம் :

தமக்கெனத் தனித் திருப்பதிகம் இன்றி, அன்னவர் திருப்பாடல்களுட் குறிக்கப்பெறும் திருத்தலங்கள் வைப்புத் தலங்கள் எனப்பெறும். திருஅடைவுத் திருத்தாண்டகத்தின் எட்டாவது பாடல், 'அயனீச்சரம்' என்னும் தலத்தைக் குறிக்கிறது. அஜன் என்னும் வடசொல், வடமொழியாக்க விதிகளை ஒட்டி, அசன் அல்லது அயன் எனத் தமிழில் வழங்கும். அயனீச்வரம் அஜனீச்வரமே ஆகும்.

நாடகம்ஆ டிட நந்தி கேச்சுரம்,மா காளேச்
 சுரம்,நாகேச் சுரம், நாக ளேச்சுரம், நன் கான
கோடீச்சுரம், கொண்டீச்சுரம், தண்டீச்சுரம்
 குக்குடேச் சுரம் மக்கீச் சுரம்கூறும்கால்,
ஆடகேச் சுரம் அகத்தீச் சுரம் அயனீச்சுரம்
 அத்தீச்சுரம் சித்தீச்சுரம் அம்தண் கானல்
ஈடுதிரை இராமேச்சுரம் என்றுஎன்று ஏத்தி
 இறைவன்உறை சுரம்பலவும் இயம்பு வோமே.

என்பது திருத்தாண்டகப் பகுதி.

## தமிழ்நாட்டில் அஜனீச்வரங்கள் :

திரு. க. வெள்ளைவாரணனர் தரும் பட்டியலின்படி தமிழகத்தில் 1. பிரமதேசம். 2. வழுவூர். 3. திருப்பனந்தாள் ஆகிய ஊர்களில் அஜனீச்வரம் என்னும் பெயரால் ஆலயங்கள் இருந்தமை அறியப்பெறுகிறது.

அம்பாசமுத்திரத்தின் ஒருகற்றொலைவில்உள்ள பிரமதேசம் அஜனீச்வரம் எனப்பெறும். வடார்க்காட்டுப்பகுதியில் அமைந்த வழுவூரில் உள்ள பிரமபுரீசுவரர் கோயிலும் அஜனீச்வரம் எனப்பெறும். இக்கோயிலில் 16 கல்வெட்டுக்கள் உள. (51 to 67 of 1908) இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்தில் வெண்குன்றக் கோட்டத்தில் இரும்பேடு நாட்டில் இருந்ததோரூர்.

மூன்றுங்குலோத்துங்களின் கல்வெட்டுத், "திருவயனீஸ்வர முடைய ஆளுடையார்" எனவும், திரிபுவனச்சக்கரவர்த்திகள் இராசராசன் இரவியான குலசேகரபாண்டியன் கல்வெட்டுக்கள், "திருவயனீசுவரமுடைய நாயனார்" எனவும் பிரமபுரீசுவரரைக் குறிப்பிடுவதால், இத்தளி அயனீசுவரம் எனப் பெற்றமையை அறியலாம் திருப்பனந்தாளில் உள்ள ஊருடையப்பர்கோயிலும் அயனீஸ்வரம் எனப்பெற்றது. இம்மூன்றனுள் திருநாவுக்கரசரால் குறிக்கப்பெற்றது எதுவென உறுதியாகக் கூறவியலாது.

**முடிப்புரை :**

திருநாவுக்கரசர் கூறும் வைப்புத் தலங்களுள் ஒன்றாகிய அஜனீச்வரம் என்னும் பெயரால், திருப்பனந்தாள் ஊருடையப்பர் கோயில் கூறப்பெற்றுள்ளது. பிரமனால் வழிபடப் பட்டமையால் 'அஜேசர்' எனப்பெற்றார் இவர். கோச்செங்கணான் செய்த தூங்கானை மாடக்கோயில். முதற்பராந்தகன் காலத்தில் திருப்பணிகள் உற்றது. சோழப்பிற்காலம் வரை பெருஞ்சிறப்புடன் இலங்கியது. திருத்தருமையாதீன அருளாட்சியில் நிலவி வருகிறது. இத்தளி 1942இல் திருப்பணி செய்யப்பெற்றது.

---

# இந்திரா காந்தி

1. சர்க்கார் வேலை மக்களின் சேவை.
2. உண்மை ஊழியனே ஊரே போற்றும்.
3. ஊழலை ஒழிக்க உதவுங்கள்.
4. கண்ணியம் களிப்பைத்தரும்:
5. வேலையைப் பெருக்கி பேச்சைக் குறை.
6. திறமையும் கட்டுப்பாடுமே தற்போதையத்தேவை.
7. இரயில்வே உடமைகள் உங்களுடையது ;
   [ அதைப் பாதுகாப்பது உங்கள் கடமை.
8. இரயில்வே சொத்து உங்கள் சொத்து ;
   [ அதை அசுத்தப்படுத்தாதீர்கள்.

# சிதம்பரம் - குகைமடம்

## —: கண்கட்டி :—

# ஸ்ரீ மறைஞான சம்பந்த நாயனர்


திருமுறைக் கலைஞர்

**வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்**


### தோற்றமும் கல்வியும் :

"தெண்ணீர் வயற்றெண்டை, நன்ருடுசான்ருேர் உடைத்து" எனப் புகழ்பெற்ற தொண்டைநாட்டின் வடபகுதியிலே பொன்முகலியாற்றின் வடகரையில் திகழும் திருக்காளத்தி என்னும் திருத்தலத்தில் சுத்தசைவ வேளாளர் குலத்தில் பரம்பரைச் சைவாசாரியார் (அபிஷேகத்தர்) மரபில், மெய்கண்ட சந்தானத்தில் *மறைஞானசம்பந்த (நாயனர்) பண்டாரம் என்பவர் தோன்றினர். இவரது பெற்ருேர்கள் பெயர் முதலியன அறிதற்கு இல்லை. ஞானசம்பந்தம் என்பது இயற்பெயர்; நாயனர் என்பது, பின்னர் அடைந்த சிறப்புப் பெயர், பண்டாரம் என்பது சைவ மரபுப் பெயர்.

இவர் இளமையின்கண் தம் தந்தையாரிடம் வேத சிவாகமங்களை அத்தியயனம் செய்தவர்; தக்கவயதில் வேத சிவாகமங்களைக் கற்றுணர்ந்தவர். அதனுல் 'மறை' என்ற அடைமொழி

---

* சந்தானுசாரியரில் ஒருவரான கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதி சிவத்திற்குச் சிவஞானேபதேசமும் சாஸ்திரோபதேசமும் செய்த திருக்களாஞ்சேரி ஸ்ரீ மறைஞானசம்பந்தர் வேறு, இங்கு கூறும் காளத்தி ஸ்ரீ மறைஞானசம்பந்தர் வேறு. திருக்களாஞ்சேரி ஸ்ரீ மறைஞானசப்பந்தர் கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதி சிவத்தின் காலமான கி. பி. 13-ஆம் நூற்ருண்டின் இறுதிக் காலமும் 14-ஆம் நூற்ருண்டின் முற்பகுதிக்காலமும் ஆகும். திருக்களாஞ்சேரி ஸ்ரீ மறைஞான சம்பந்தரும் சந்தானுசாரியர்களில் ஒருவராவர்.

யைத் தம்பெயர் முன் பெற்று மறைஞானசம்பந்தப் பண்டாரம் என வழங்கப்பெற்ருர். ஸ்ரீ என்பது மரியாதைப் பெயர்.

மறைஞானசம்பந்தர் இளமைப் பருவத்திலே ஒரு கணக்காயரிடம் தமிழ் நெடுங்கணக்கு முதலியவற்றை நன்கு கற்றறிந்தார். வடமொழியிலும் பயிற்சி பெற்ருர். கல்வியில் தீவிர ஞானங் கொண்டார்; கல்வி பயிலும் சிறுபருவத்திலேயே அடக்கம், பணிவு, அன்பு, இரக்கம் இன்சொல், வாய்மை, நன் முகம், பேசும் சாதுரியம் பக்தி சைவசீலம் முதலியவற்றை இயல்பாகப் பெற்று விளங்கினுர்.

திருக்காளத்தி நகரில் சைவாசாரியர் பரம்பரையில் வந்தவரும், வடமொழி தென் மொழிகளில் மிக வல்லவருமான ஸ்ரீகண்ணப்பப்பண்டாரம் என்பவர் ஒருவர் இருந்தார். அப் பெரியாரிடம் மறைஞானசம்பந்தப் பண்டாரம் தக்க வயதில் சமய தீட்சையினைப் பெற்றுச்சரியை நெறியில் நின்று ஒழுகினுர்; அவர்களிடமே தமிழில் இலக்கணம், தருக்கம், நிகண்டு முதலிய கருவி நூல்களையும், பற்பல இலக்கிய நூல்களையும், நீதி நூல்களையும் தேவார திருவாசகம் முதலிய அருட்பாக்களையும், சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும், வடமொழியில் அஷ்டப்பிரகரணம் சித்தாந்த சாராவளி, சோமசம்புபத்ததி, அகோரசிவர்பத்ததி, சகலாகமசாரசங்கிரகம், காமிகம், சூக்குமம், அசிவம், வாதுளம் முதலிய சிவாகமங்களையும், பிற நூல்களையும் நாளடைவில் வரன் முறையாகக் கற்றுணர்ந்தார்; இரு மொழிகளிலும் நல்ல தேர்ச்சியும், அறிவு நுட்பமும், மனனசக்தியும், பேச்சுவன்மையும் தமிழில் கவிபாடும் பெரும்புலமையும் பெற்ருர்.

சைவ சமய சீலம் :

இரு மொழியிலுள்ள பல நூல்களை நன்கு கற்றுணர்ந்து பெரும் புலமை வாய்ந்து வருங்காலத்திலேயே மறைஞானசம்பந்தப் பண்டாரம் அவர்கள் தம் வித்தியா குருவிடமே விசேட தீட்டை, நிருவாண தீட்சை, ( – அத்துவசுத்தி, சிகாச்சேதம் ) சங்காபிஷேகம் முதலியன பெற்று விளங்கினுர்; மறைஞான சம்பந்த தேசிகர் என்ற பெயரும் கொண்டார், சைவானுட்டானம், உடையவர் பூசை ( ஆன்மார்த்த சிவலிங்கம் – ஸ்ரீ காளத்திநாதர்) அக்கினிகாரியம் முதலிய சைவ சமய நியமங்களை முறையாகச் செவ்வையாகக் கைகொண்டு ஒழுகியவரானுர்; பின்னர் காவி இன்றி வெள்ளை வேஷ்டி முண்டித நைட்டிக பிரமசாரி ( – ஆயுள் முடிவுவரை திருமணம் இன்றிப் பிரமசாரியாக ஒழுகுதல் ) யாகச் சைவத் துறவு பூண்டு விளங்கினுர்.

தேசிகர் அவர்கள் கல்வி நிலையிலும், சைவ ஒழுக்கநிலையிலும் சைவத்துறவு நிலையிலும் பிறர் போற்றத் திகழ்ந்தார்; நல்ல சிவப்பொலிவுடன் கண்டார் வணங்கத் தக்க உயர் நிலையில் விளங்கினுர்; தம்மை அடுத்துக் கல்வி பயிலும் மாணுக்கர்களுக்குக் கல்வி போதிக்கும் பேராசிரியராகவும், சிவாகம முறைப்படி சிவதீட்சை, சிவப்பிரதிஷ்டை, சைவ சோடசம் அபரம் முதலிய சைவக்கிரியைகளைப் பிறர்க்குச் செவ்விய முறையில் செய்து வைக்கும் ஆற்றல் படைத்த சைவாசாரியராகவும் இருந்து வரலானுர்.

## தென்னுட்டு யாத்திரை :

ஒருநாள் காளத்தி மறைஞான சம்பந்த தேசிகர் அவர்கள் தமது சுமார் 30–வயதிற்கெல்லாம் தென்னுட்டுச் சிவதலங்களைத் தரிசித்து வழிபட்டு வர விரும்பினுர்; தம் ஆசாரியரிடமும், தம் உறவினர்களிடமும், மாணுக்கர், அன்பர் முதலியோர்களிடமும் தம் விருப்பத்தை அறிவித்தார்; பிறகு மலைக்கொழுந்தாகிய திருக்காளத்தியப்பரையும் ஞானப்பூங்கோதை அம்மையாரையும் வழிபட்டுக்கொண்டு ஒரு நன்னுளில் தமக்குப் பணிபுரிய பணிவிடை ஆள் ஒருவரைத் துணையாக அழைத்துக் கொண்டு தென்னுடு நோக்கிப் புறப்பட்டார். முன்னர் திருவாலங்காடு, காஞ்சிபுரம், சிதம்பரம், சீகாழி, வேளூர், திருவிடைமருதூர், திருக்கடவூர், ஸ்ரீவாஞ்சியம் முதலிய தலங்களை அடைந்து தரிசித்து வழிபட்டார். பின்னர் பிறக்க முத்திதரும் திருவாரூரை அடைந்தார்.

## திருவாரூரில் சில காலம் வாசம் :

முன்னர், மறை ஞானசம்பந்த தேசிகர், திருவாரூர்-கமலாலயத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி நியமானுட்டானம், ஆன்மார்த்த சிவபூசையாதிகளை முடித்துக்கொண்டு, திருவாரூர்-பூங்கோயிலினுள் சென்று தியாகராசப் பெருமானையும், வன்மீக நாதரையும் தரிசித்து வழிபட்டார்; அப்போது அங்குத் தரிசனத்திற்கு வந்திருந்த பல சைவ அன்பர்களைச் சந்தித்துப் பேசி அவர்கள் நட்பினைப் பெறலானுர்; அவ்வன்பர்கள் வேண்டுகோளின்படி தெற்கு வீதியிலுள்ள ஒரு சைவ மடாலயத்தில் சில காலம் தங்கியிருந்துகொண்டு சிவதரிசனமும், சைவ சமய சொற்பொழிவும் செய்து வரலானுர்; இவரது கல்வித் திறமை, சைவ சீலம் முதலியவற்றைக் கண்ட பல அறிஞர்கள் சைவாசாரியர்கள் இவரிடம் பெருமதிப்புக்கொண்டு நட்புப்பூண்டனர். அச்சமயம் காளத்தி மறைஞானசம்பந்த தேசிகர் ஆரூர்த் தியாகேசரது கோயிற் காரியங்களை விசாரணை செய்துவரும் செட்டித்தெரு

ஞானப்பிரகாச பண்டாரம் † அவர்களை அடிக்கடி சந்தித்து சிவாகமத்தில் கூறும் பதி பசு, பாசம் ஆகிய நுண்ணிய பொருள்களைப் பற்றி அளவளாவி மகிழ்ந்து வருவார்; பல சைவ அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் திருவாரூர்த் தலத்தைப் பற்றி வடநூல் கூறுவனவற்றைத் தமிழில் செவ்விய முறையில் கமலாலய புராணம் ‡ என்ற ஒன்று 20-சருக்கங்கள் கொண்ட 1065 செய்யுட்களால் பாடி முடித்தார்.

அதன் பிறகு மறைஞானசம்பந்த தேசிகர் தாம் இயற்றிய கமலாலய புராணத்தைத் திருவாரூர்த் திருக்கோயில் தேவாசிரிய மண்டபத்தில் சைவர்கள், வைதிகர்கள், புலவர்கள் நகரப் பெருமக்கள் முதலியோர் குழுமிய சபையின்கண், கத-கலியப்தம் 4647-க்கு (கி. பி. 1547) ச் சரியான பராபவ ஆண்டு தைத் திங்கள், வளர்பிறை திரியோதசி திங்கட்கிழமை, மகேந்திர யோகம், கௌலவ கரணம் கூடிய நன்னாளிலே அரங்கேற்றினர். அதுபோது அவர் நல்ல புகழும் பெரு மதிப்பும் பெற்று விளங்கினர் திருவாரூரிலுள்ள சைவாசாரியர் பலர் தங்கள் தங்கள் இல்லத்திற்கு மறைஞானசம்பந்த தேசிகரைப் பெரு விருந்தினராக வரவேற்று உபசரித்துப் போற்றி வந்தனர். ஆரூரில் பல மாதங்கள் சிறப்பாகக் கழிந்துவருங்கால் மறைஞானசம்பந்த தேசிகர், பல தலங்களை அடைந்து தரிசிக்க விரும்பித் தம் அன்பர்களிடம் பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டு, வேதாரண்யம் சென்று வேதவனப் பெருமானைத் தரிசித்தார்; அங்குச் சேது

---

† இவர்கள் இரு மொழிகளிலும் வல்லவர்கள், சிவஞானம் கைவரப்பெற்று இல்லறத்தில் ஒழுகியவர்கள் தம் சீடர்களைக் கொண்டு ஆரூர்-தியாகேசரது கோயில் கட்டளை விசாரணை புரிந்து வந்தவர்கள்; புஷ்பவிதி அனுட்டான அகவல், சிவபூசை அகவல், பிராசாதமாலை, ஞானப்பள், திருமழுவாடி (திருமழபாடி) புராணம் முதலிய நூல்கள் இயற்றியவர்கள்; திருமழுவாடி புராணம் சாலிவாகன சகம் 1487 (கி. பி. 1566)-ல் பாடி அரங்கேற்றியதாக அந்நூல் கூறுகிறது.

‡ திருவாரூர்ப் புராணம் வேறு; கமலாலய புராணம் வேறு. திருவாரூர்ப் புராணம் தென் பாண்டிநாட்டு அளகாபுரி, சம்பந்த முனிவர் இயற்றியது; அவர் சைவ வணிககுலத்தினர்; நிரம்பழகிய தேசிகரிடம் சிவதீட்சை பெற்றவர்; சைவத் துறவு பூண்டவர்; திருவாரூரில் வசித்தவர்; திருவாரூர்ப் புராணத்தைத் தேவாசிரிய மண்டபத்தில் சகம் 1514 (-1592)-ல் அரங்கேற்றினர் என அந்நூல் கூறுகிறது.

புராணம் பாடிய நிரம்பழகிய தேசிகர் * அவர்களைக் கண்டு அளவளாவி மகிழ்த்து சில நாட்கள் அங்கும் தங்கிச் சமயச் சொற்பொழிவு பல புரிந்து, பின்பு இராமேச்சுரம், திருக்குற்றாலம், பாபநாசம், பொதியமலை, கன்னியாகுமரி, திருச்செந்தூர், திருநெல்வேலி, மதுரை, பழநி. திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, விருத்தாசலம், திருவெண்ணெய்நல்லூர், திருக்கோவல்வீரட்டம் முதலிய சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு பற்பல நாட்கள் தங்கியிருந்து பின்பு திருவண்ணாமலை என்னும் தலத்தை அடைந்தார்.

(தொடரும்)

---

* இவரது இப்பெயர் சிவபெருமானுக்குரிய பெயர் "நித்த மணாளர் நிரம்பஅழகியர்" என்பது திருவாசகம்- அன்னைப்பத்து. இவர், வேதாரண்யத்தில் தோன்றியவர்; சுத்த சைவ அபிஷேகத்தர் மரபில் வந்தவர்; கமலை செட்டித்தெரு ஞானப்பிரகாசப் பண்டாரம் அவர்களுக்கு உறவினர்; பாண்டிநாட்டுக் குன்றக்குடிக்கு மேற்கேயுள்ள துழாயூர் ஆதீன மடாலயத்தைச் சேர்ந்தவர்; சேதுபுராணமே அன்றித் திருப்பரங்கிரி புராணமும் பாடியவர்; சிவஞானசித்தியார், திருவருட் பயன் ஆகிய சித்தாந்த நூல்களுக்கு உரை வகுத்தவர். கி. பி. 16-ம் நூற்றாண்டின் இடையில் இருந்தவர் என்பது வரலாறு.

---

கடிதம் :

ஞானசம்பந்தம் 10-9-75தேதியிட்ட இதழ் மிகநன்றாகஅமைந்துள்ளது. திருஞானசம்பந்தரின் வைப்புத் தலங்களைப் பற்றிய விபரம் மிகத் தெளிவாக உள்ளது. அடுத்து அப்பர் பிரானின் வைப்புத் தலங்களைப் பற்றிய விபரம் எழுதுவதாக இருக்கக்கண்டு மிக்க மகிழ்ச்சி. அதுபோலவே பிற பாடல் பெற்ற தலங்களையும் வரிசையாக எழுதும்படி மிக்க தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

நந்திக் கதம்பம் "நஜன்" எழுதிய கட்டுரை மிக அழகாக அமைந்துள்ளது. அத்துடன் தாரமங்கலம் சிவபெருமான்மீது சூரிய ஒளி நந்தியின் இருகொம்புக்கிடையில் வீழுகிறது என்று எழுதியது கண்டு மிக்க மகிழ்ச்சி. அத்துடன் மாசி 9, 10, 11 தேதிகளில் சூரிய ஒளி விழுகிறது என்று எழுதியிருந்தார். அதைக்காணவரும் அன்பர்களுக்கு மிக பயன் உள்ளவகையில் அமைந்து இருக்கும். * * *

தாரமங்கலம், கா. வை. தம்பு.

25—9—75.

# சக்தி வழிபாடு

## திரு. என். இராமகிருஷ்ண

தமிழ்நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக சக்தி வழிபாடு நடைபெற்று வருகின்றது என்பதைச் சரித்திரமும் இலக்கியமும் கூறுகின்றன. சக்தி வழிபாட்டை அக்காலத்தில் இரண்டு வகைகளாகப் பிரித்திருந்தார்கள். ஒன்று சக்தியின் உக்ர தன்மை; மற்றொன்று அவளது சாந்த சொரூப தன்மை. உக்கிரகமாக இருக்கும் போது அரக்கர் கும்பலை அழித்தாள். அப்போது அவள் சண்டி, துர்க்கை, காளி, சூலி, சதி, கபாலினி என்று அழைக்கப்பட்டாள். சாந்த சொரூபியாக விளங்கியபோது அவளுடைய திருநாமங்கள் பவானி, கௌரி, உமை, தேவி, ஜெகதீஸ்வரி என்று அம்பிகையின் பெயர் வழங்கி வந்தன. பாரதத்தின் பல பகுதிகளில் சக்தி வழிபாடு இருந்த போதிலும் தமிழகத்தில் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது என்பது சிறப்பானது.

முதன் முதலாக மிகவும் விரிவாக துர்க்கை வழிபாட்டைப் பற்றிக் கூறும் நூல் சிலப்பதிகாரம். அது தாருகன் மகிழாசுரன் போன்ற அரக்கர்கள் துர்க்கையால் அழிக்கப்பட்டார்கள் என்று கூறுகிறது

சரித்திர வாயிலாக நாம் துர்க்கை வழிபாட்டைப் பற்றி அறிந்தது பல்லவர்காலத்தில் தான். மாமல்லபுரத்திலே ஆதி வராகர் குகையிலும், மஹிஷாசுர மர்த்தனி குகையிலும் சிங்கவரம் அரங்கநாதர் ஆலயத்திலும் விஷ்ணுவும் மகிழாசுர மர்த்தனியும் காணப்படுகின்றனர் பிற்காலத்தில் பாண்டியர்கள் இதைப் பின்பற்றி பல கற்கோயில்களை துர்க்கைக்குக் கட்டலாயினர்.

துர்க்கைக்கு மட்டுமில்லாமல் சக்தியின் பல்வேறு வடிவங்களுக்கும் பல்லவர்கள் முதல் முதலாக கோவில்கள் கட்டினர். பல்லவர்களுக்கு முன்பாக சிலப்பதிகார காலத்தில் கோயில்கள் இருந்திருக்கவேண்டும். அவைகாலத்தின் பசிக்கு இலக்காகி அழிந்திருக்க வேண்டும்.

மகாபலிபுரத்திலுள்ள சலுபன் குப்பம் புலிக்குகை துர்க்கைக்காக எடுக்கப்பட்டது என்று பல்லவ சரித்திரம் கூறுகின்றது. மகாபலிபுரத்தில் பல மண்டபங்கள் துர்க்கைக்காக கட்டப்பட்டன. திரௌபதிரதம் துர்க்கைக்காக ஏற்படுத்தப்பட்டது ஆகும். இன்றும் இதன் பின்புறச் சுவற்றில் துர்க்கையின் உருவத்தைக் காணலாம். பல்லவர் காலத்து துர்க்கை பலவிதமானது.

பல்லவர்களுக்குப் பின் வந்த சோழர்கள் துர்க்கை வழிபாட்டைத் தொடர்ந்து நடத்தினர். நிசும்பன் என்ற அசுரனைக் கொன்றதால் அவளுக்கு நிசும்ப சூதனி என்ற பெயர் கொடுக்கப்பட்டது. தஞ்சைக்கு அருகில் விஜயாலயசோழன் துர்க்கைக்குக் கோவில் எடுத்தான். இவள் உருவம் மிகவும் பயங்கரமானது. சோழர் காலத்தில் மிகவும் சிறப்பான துர்க்கையின் உருவங்கள் செய்யப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் பக்கலில் உள்ள புஞ்சை என்ற ஊரில் துர்க்கையின் மிகவும் அழகான உருவம் உள்ளது, திருவாரூரில் அழகான துர்க்கை உள்ளாள், திருவாழ்கொளிபுத்தூர் துர்க்கை உருவம் விசேஷமானது. கிடாத்தலைமேடு என்ற ஊரில் அபூர்வமான துர்க்கையின் உருவம்உள்ளது. ஆதிசங்கரர் சௌந்தர்யலஹரி என்ற நூலில் சக்தியின்சிறப்பைக் காட்டியுள்ளார்கள். ஆனால் சக்தியைத் திருப்திசெய்ய மக்கள் கொடுத்துவந்த நரபலியை அவர் ஏற்கவில்லை.

சக்தியும் துர்க்கையும் சாதாரணமாக சிங்க வாகனத்துடன் காணப்படுகின்றனர். ஆனால் சில இடங்களில் கலைமானும் காணப்படுகின்றது. மகாபலிபுரம் ஆதிவராகர்குகையில் இது உள்ளது. பின்பு சோழர் காலத்தில் இது தொடர்ந்து வந்தது. சென்னை அரசாங்க மியூசியத்தில் சில சிலைகள் இம்மாதிரி காணப்படுகின்றன. தேவாரமும் கம்ப ராமாயணமும் துர்க்கையையும் கலைமானையும் இணைத்துக் கூறுகின்றன.

பண்டைக் காலத்தில் துர்க்கைக்கு நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்துவந்தது. ஒன்பது இடங்களிலிருந்து சதையை வெட்டி எடுத்து மனிதன்தானே தேவிக்குப் பலிகொடுத்தானும். இம்மாதிரியான நரபலிக்கு நரகண்டம் என்று பெயர். பல்லவ கால துர்க்கையின் சிலைகளில் மனிதனின் துண்டிக்கப்பட்ட தலைகளும் காணப்படுகின்றன. தன் தலையைத் தானே வெட்டி காணிக்கை கொடுத்த தீவிர பக்தர்களும் உண்டு. பின்பு வந்த விஜயநகர மன்னர்கால சிற்பங்களில், இம்மாதிரி காட்சிகள் காணப்படாததால், இந்தப்பழக்கம் நாளடைவில் நின்றுவிட்டது என்று தெரிகின்றது.

துர்க்கைக்கு எழுப்பப்பட்ட பிற கோவில்களில் சப்த மாதாக்களின் சிலைகள் காணப்படுகின்றன. இவர்களின் பெயர்களாவன-பிராமி, மாகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி இந்திராணி சாமுண்டி என்பன. சப்த மாதாக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சிலைகள் திருத்தணி வீரட்டேஸ்வரர் கோவிலில் உள்ளன. இது பல்லவர் கால கோவில். சோழ அரசர்களின் கல்வெட்டுக்களில் துர்க்கை மற்றும் சப்த மாதாக்களின் விவரங்கள் உள்ளன. சிவன் கோவில்களில் சப்த மாதாக்களுக்கு கோவில்கள் சோழ அரசர்கள் ஏற்படுத்தினர். பரிவார தேவதைகளாக இவை கருதப்பட்டன. காலப் போக்கில் சப்த மாதாக்கள் கோவில்கள் குறைந்து விட்டன. 12 ம் நூற்ருண்டின் முடிவில் இப்பழக்கம் முற்றிலும் கைவிடப்பட்டது.

சக்தியின் அம்சங்கள் ஜேஷ்டா. ஜேஷ்டாவை அலக்ஷ்மி என்று கூறுவர். சக்தியை திருமாலின் தங்கை எனவும் ஜேஷ்டாவை லக்ஷ்மியின் அக்கா எனவும் மக்கள் கூறினர். புராண இதிகாசங்களிலும் சம்ஸ்கிருத நூல்களிலும் ஜேஷ்டா வழிபாடு கூறப்பட்டுள்ளது. இவளுக்கு எட்டு விதமான வடிவங்கள் உண்டு என்று அறிகின்ருேம். ஜேஷ்டா கெடுதல்களை அடியோடு அழிக்கும் சக்தி வாய்ந்தவள். 9-ம் நூற்ருண்டில் ஜேஷ்டா வழிபாடு சிறப்பாக இருந்தது என்று சரித்திரம் கூறுகின்றது.

நாளடைவில் சக்தி சப்தமாதாக்கள் ஜேஷ்டாதேவிவழிபாடு குறைந்து அம்மன் வழிபாடு ஆரம்பமாயிற்று. அம்மன்தான் பார்வதி தேவி

பல்லவர் காலத்தில் பார்வதிக்குத் தனிக்கோயில் கிடையாது. அவள் சிவனுடனும் கந்தனுடனும் சோமாஸ்கந்தராக சேர்த்தே வழிபடப்பட்டாள். சோழர் காலத்திலும் பார்வதிக்கு தனிகோவில் கிடையாது. இப்போது நாம் காணும் அம்பாள் கோவில்கள் பிற்காலத்தவை. பிற்காலக் கோவில்கள் "திருக்காமக் கோட்டம்" என்று பெயர் பெற்றன. பாண்டியர்கள் மற்றும் விஜயநகர அரசர்கள் தாம் கட்டிய கோவில்களில் பார்வதிக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

தமிழ் நாட்டில் இவை அல்லாது மற்றும் தேவதைகள் உள்ளன. அவைதாம் "கிராம தேவதைகள்" கிராம தேவதைகளின் வழிபாடு மிகவும் புராதனமானது. சோழர் கல்வெட்டுகளில் கிராம தேவதைகளின் கோவில்கள் "திருமுற்றம்" என்று கூறப்பட்டுள்ளன. இவைகளும் மிகவும் தொன்மையானவை.

கிராம தேவதைகள் பல பெயர்களை கொண்டுள்ளவை. பிடாரி மிகவும் பிரசித்தமான கிராம தேவதை. பலவகை பிடாரிகள் உண்டு. உடையல் பிடாரி, கூறுடையான் பிடாரி, நங்கை பிடாரி, கடுகல் பிடாரி என்று பலவிதம். இவை அல்லாமல் காளி, மகாகாளி, பத்ரகாளி, செல்லாண்டிஅம்மன், திரௌபதி அம்மன் போன்ற கிராம தேவதைகள் சக்தியின் அம்சமாக கருதப்படுகின்றன. இவற்றை கிராம மக்கள் வெகுவாக ஆராதிக்கின்றனர்; மிருகபலி கொடுக்கின்றனர். விழாக்களில் கரகம் எடுத்து தீமிதி செய்கின்றனர். அம்மை நோயின் தெய்வம் மாரியம்மன்; ஆந்திராவில் இவளுக்குப் பெயர் போலாரம்மா. மாரியம்மன் மழைக் கடவுளாகவும் போற்றப்படுகின்றாள். மற்றும் பல பெயர்கள் நம் நினைவுக்கு வருகின்றன. பேச்சி அம்மன், அங்காளம்மன், பங்காரம்மன், மாதம்மா, மாதங்கி, முதலியன கிராம தேவதைகள்.

## தருமையில் கொற்றவை :

தருமபுரத்தில் மிகவும் விசேஷமான துர்க்கைகள் இரண்டு உள்ளன. ஒன்று அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி. 18 கைகள்கொண்ட இந்த தேவியின் உருவம்போல நம்நாட்டில் எங்கும் கிடையாது. நவராத்திரியின்போது விசேஷ ஆராதனைகள் நடைபெறும். மிகச் சமீபகால கோவில் என்றாலும் 10 கோடி அர்ச்சனை விசேஷத்தால் அம்பாள் மிகவும் சக்தியுடன் காணப்படுகின்றாள். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ 26-வது மகாசந்நிதானம் அவர்கள் நவராத்திரியைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். மற்றொரு கோவில் வன துர்க்கை கோவில். ஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவில் உள்ள இக் கோவிலும் சமீபகாலத்தில் கட்டப்பட்டது வனதுர்க்கை கோவில் தமிழ் நாட்டில் அதிகம் கிடையாது துர்க்கை எட்டுக் கைகளுடன் சிங்கத்தின் மீது வீற்றிருக்கின்றாள். இங்கு வசந்த நவராத்திரி சிறப்பாக நடைபெறும்.

சமீப காலத்தில் கட்டப்பட்டு தற்போது சிறப்பாக விளங்கும் மற்றொரு துர்க்கையின் கோவில் கதிராமங்கலத்தில் உள்ளது. இது தஞ்சை மாவட்டத்தில் குத்தாலம் பக்கலில் உள்ளது. மணமாகாதபெண்கள் இங்குச்சென்று துர்க்கையைவேண்டிக்கொண்டால் சீக்கிரம் பலன் அடைவார்கள். என் சொந்த அனுபவம் அதுவே. திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இக்கோவிலில் மிக்க ஈடுபாடு கொண்டு வழிபாடு செய்கின்றார்கள். இந்த துர்க்கையும் மிகவும் சக்தி வாய்ந்தவள். தற்போது இத் துர்க்காம்பிகைக்குக் கோடி அர்ச்சனை நடைபெற்று வருகின்றது.

# தாசனுக்குத் தாசன்

வித்துவான். திரு. வெ. சுப்பிரமணியன்

ஆதிபராசக்தியின் அம்சங்களுள் துர்க்காதேவியம்சம் மிகச் சிறந்ததாகும். துர்க்காதேவியைக் கொற்றவை என்றும் காளி தேவி என்றும் தமிழில் வழங்குவர். "காளி காபாலினி சூலினி" என்றும் போற்றுவர். அத்தகைய பராசக்தியான காளிதேவியின் அருளால் கவிஞர்களாகிக் கவி மழையைப் பொழிந்தவர்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் இருவராவர். என்றும் வாடாமலர் போன்ற மொழியாகிய வடமொழியிலே சிறந்து விளங்கிய காளிதாசரும், தேன்மொழியாகிய தமிழ் மொழியிலே சிறப்புற்று விளங்கிய கம்பரும் தேவியின் அருள்பெற்று விளங்கியவரே யாவர். காளிதாச மகாகவி ஏறக்குறைய கி. பி. நான்காம் நூற்றுண்டில் வாழ்ந்தவராவர். கம்பர் கி. பி. 12 ஆம் நூற்றுண் டினராவர். இருவரும் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தவராயி னும் ஏற்றத்தாழ்வின்றிக் கருத்து வளம் மிக்கவராகவே விளங்கு கின்றனர். தேவியானவள் இருவர்க்கும் கலைச் செல்வத்தை யளித்துக் கலைக்குரிய தெய்வமாகவே தோற்றமளித்தனள்போ லும்! காளிதாசன் கலைமகள்மீது "சியாமளா தண்டகம்" என்னும் பாடலைப் பாடியருளினர். கம்பரோ "சரஸ்வதி அந்தாதி" என்ற நூலைத்திருவாய்மலர்ந்தருளினர். எனவே இரு வரும் உலக மகாகவிஞர்களுள் தலைசிறந்தவராவர்.

காளிதாசனை உவமையின் அவதாரம் என்பர். (உபமா காளிதாஸஸ்ய மாகே ஸந்தி த்ர யோகுணு:) என்று பாராட்டி யுள்ளார். ஆங்கிலத்தில் "Kalidase is am embodiment of Simile" என்பர். இவர் பல அரசர்களுடைய அரசவையை அலங்கரித்து விளங்கினர். கம்பரை விரைந்தேற்றுக்கொண்ட முத்தமிழ் மன்னர்களைப்போலவும், கம்பரைப் பிரிந்த சோழன் வருந்தியதைப்போன்றும் காளிதாசனைப் பாரதநாட்டு மன்னர் கள் பலரும் வரவேற்று உபசரித்து மகிழ்ந்தனர். காளிதாசனைப் பிரிந்த மன்னர்கள் வருந்தினர். போஜன் என்ற மன்னன் காளிதாசனைக் காணுமல் வருந்தியலைந்த கதையைக் கற்றவர்

அறிவர். அந்தப் போஜராஜன் முதன்முதலாகக் காளிதாசனைச் சந்திக்கின்றான்.

ஒருநாள் போஜராஜன் சிவபூஜை செய்துகொண்டிருக்கிறான். மகாகவி காளிதாசன் போஜராஜனுடைய அரசவைப் புலவர்கள் கூட்டத்திலே காட்சியளிக்கின்றான். அவைப்புலவர்கள் காளிதாசனைக்கண்டு மகிழ்ந்து உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது அவ்வித்துவான்கள், அரசன் சங்கர கவிக்கு லக்ஷம் பொன் பரிசளித்ததைப்பற்றிக் கூறினர்கள். காளிதாசன் அரசன் செய்வது சங்கரன் பூஜையாதலின் அப்பெயருடைய சங்கரகவிக்கு நாமவிசேஷம்பற்றி பூஜாகாலத்தில் ருத்திரருக்குத் தானஞ்செய்வது சிறப்பாதலாலும் பதினொரு ருத்திரருக்கும் பதினொரு லக்ஷமாகவும் சங்கரக் கவிக்கு ஒரு லக்ஷமுமாகச் சேர்த்து பன்னிரண்டுலக்ஷம் பொன் அக்கவிக்குக் கொடுத்தார் என்றார், அதைக்கேட்டவர்கள் காளிதாசனின் வாக்குவன்மையைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். அப்போது அரசனும் அரசவைக்கு வந்து மகாகவி காளிதாசனைக்கண்டு அகமும் முகமும் மலர வரவேற்று உபசரித்தான். அன்று அரசவை என்றும் இல்லாத தனிச்சிறப்பைப்பெற்றிருந்தது. அரசன் காளிதாசனைப் போற்றினன்; பணிந்தான். இரும்புக்கும் காந்தத்திற்கும் உள்ள கவர்ச்சியைப்போல போஜனும் காளிதாசனும் புலவர்குழாத்திடையே கவர்ச்சியாய்க் கலந்து உரையாடுகின்றனர். பகற்பொழுது போனதே தெரியவில்லை. மாலைக்காலம் ஆகியது. சூரியனும் கடலிலாழ்ந்தான். அதனை அரசன், "பரிபததி பயோநிதௌ பதங்க:" என்று ஒருசுலோகத்தின் (செய்யுளின்) முதலடியாகச் சொன்னன். அப்புலவர் குழாத்திடையேயிருந்த புலவர் பெருமாட்டியார் தாம் நேரில்கண்டனுபவித்த மாலைக்கால நிகழ்ச்சிகளில் ஒன்றாகிய "வண்டுகள் தாமரை மலரில் அடங்கின" என்னுங்கருத்துள்ள, "ஸரஸிருஹாமுதரேஷு மத்தப் ருங்க:" என்ற இரண்டாவது அடியைச் சொன்னாள். கவிசிரேஷ்டராகிய பாணகவி என்பவர் மாலைக்காலத்தில் பறவைகள் மரங்களைச் சார்வதைக் கூறநினைத்து, "பறவைகள் உத்தியானவனத்தின் மரப்பொந்துகளில் அடங்கின" என்னும் கருத்தை, "உபவநதருகோடரே விஹங்க:" என்று மூன்றாவது அடியாகப் பாடினர். நான்காவது அடியை யாரும் கூறாதிருக்கவே, அரசன் காளிதாசரைப்பார்த்து நான்காமடியைப் பாடவேண்டினர்.

கவிராஜ சிங்கமாகிய காளிதாசர் 'யுவதிகளிடத்தில் மன்மதன் மெல்ல மெல்ல வரத்தலைப்பட்டான்' என்னுங்கருத்துப்பட, "யுவதிஜநேஷு ஸநைஸ் ஸநைரநங்க:॥" என

நான்காமடியைச் சொன்னார். இதனைக்கேட்ட போஜராஜன் கவி சாகரத்தில் மூழ்கினான். சொற்சுவையும் பொருட்சுவையும் நன்ருகத் தெவிட்டாத தெள்ளமுதாய் தோன்றவே, அரசன், காளிதாசன் வாயிலாகவே மாலைக்கால வருணனை முழுவதையும் கேட்டுக் களிக்க விரும்பினான். அரசனது விருப்பத்தை நிறைவேற்ற காளிதாசனும் மறுப்பனோ! உடனே அவர் மாலைக்கால வருணனையைத் தம் அனுபவ உவமையால் கூறுகிறார். மனக் கவலையுள்ளவன் கற்ற கல்வி பிரகாசிக்காது மழுங்கும். அது போல சூரியனைக்கண்டு பிரகாசித்த தாமரை மலர் அந்த மாலைக் காலத்தே ஒளியிழந்தது. அந்நியதேசத்தை யடைந்த பெருந் தன்மையையுடையமானியும் கீழ்மையுடையவனேயாவான். பகல் காலத்தில் மகிழ்வுடன் மலர்தேனைக் குடித்து மகிழ்ந்த வண்டுகள் மாலைக்காலத்தில் மயங்குகின்ற தன்மையை கீழ்மை என்றார். இருள் துயரத்தைத்தரும். கொடுங்கோல் மன்னனது ஆட்சியும் துன்பமேயாகும். இதனை உவமையாக்கினார் கவிஞர். உலோபி களுடைய செல்வம் நற்காரியங்களுக்குப் பயன்படாது. பெரியோர் கண்டவுண்மை. சூரிய ஒளி நுழையாத இடத்தையும் கவிஞர்கள் நுழைந்து காண்பர் எனவே இந்த உவமை மகாகவிக்கு எட்டாததா? அவர் அறிவுக்கு இது எளிமையான கருத்தாயினும் ஆய்ந்து ஆழ்ந்து உலோபத்தன்மையின்றி நன்ருகச் செயல்பட வேண்டியது மக்கள் செய்யவேண்டுவதாகலின் இதனை உவமை யாகக் கொண்டார். நல்ல கூரிய பார்வையுடையவருடைய கண்ணுயினும் இருளில் ஒளியிழத்தல் இயல்பு. அந்த மாலைக் காலத்தையடுத்து வரப்போவது இருட்டாதலாலும், இருளில் ஒளி தெரியாது துயரப்படும் கண்களை நினைவுபடுத்துகிருர் மகாகவி.

வ்யஸநிநஇவ வித்யாக்ஷீயதே பங்கஜஸ்ரீ:
குணிநஇவ விதேசே தைன்யமாயாந் திப்ருங்கா:
குருந்ருபதிரிவ லோகம் பீடயத்யந்த கார:
தரமிவ க்ருபணஸ்ய வ்யர்த்த தாமேதிசக்ஷு:

மனக்கவலையுடையவனுடைய கல்வியறிவு மங்குவதுபோல மாலைக் காலத்தே தாமரை ஒளியிழந்தது; அந்நியதேசத்தைச் சென்று சேர்ந்த மானி கீழ்மையடைவது போன்று வண்டுகள் மகிழ்வை யிழந்தன. கொடுங்கோல் மன்னன் வருத்துவதுபோல வருத் தும் இருளும், உலோபிகளின் செல்வம் நல்வழியில் செலவாகா ததுபோன்று ஒளியிழந்த பயனற்ற கண்களும் மயக்கம் தரும் மாலைக்காலத்திற்கு உவமைகளாம். இப்பாடலைக்கேட்ட போஜ ராஜன், காளிதாசனுக்கும் தாசனுனன். என்னே மன்னனின் மாண்பு!

# தேவார வைப்புத் தலங்கள்

## திருநாவுக்கரசர்

[ மூவர் தேவாரப் பதிகங்களிலும், தமக்கெனத் தனித்திருப் பதிகத்தினைப் பெறுமல் பிறதலப்பதிகங்களிலும், பொதுப்பதிகங்களிலும் பெயரளவில் குறித்துப் போற்றப்பெற்ற தலங்கள் தேவார வைப்புத்தலங்கள் என வழங்கப் பெறுகின்றன. சென்ற இதழில் திருஞானசம்பந்தர் தேவாரத்துட் காணப்பெறும் வைப்புத்தலங்கள் வெளியிடப்பெற்றன. இவ்விதழ் தொடங்கித் திருநாவுக்கரசர் தேவாரத்துள் இடம்பெறும் வைப்புத்தலங்கள் பற்றிய குறிப்புக்கள் வெளியிடப் பெறுகின்றன. எண்கள் முறையே, திருமுறை – பதிகம் – பாடல் எண்களைக் குறிப்பன ]

| தலம் | பதிக எண் | இருப்பிடம் |
|---|---|---|
| 1 அகத்தீச்சுரம் | 6-71-8 | கன்னியாகுமரியிலிருந்து மூன்றுகல் தொலைவில் உள்ளது என்பர் திரு. செங்கல்வராய பிள்ளை |
| 2 அக்கீச்சரம் | 6-71-8 | தஞ்சை மாவட்டம், கஞ்சனூரில் உள்ள சிவாலயம் திருவக்கீச்சரம் எனக் கல்வெட்டுக் குறிக்கிறது. |
| 3 அசோகந்தி<br>அயோகந்தி | 6-70-9<br>6-7-10 | திருச்சாத்தமங்கையில், திருநீலநக்க நாயனரால் வழிபடப் பெற்ற 'அயவந்தி' எனக் கருதுதல் பொருந்தும். |
| 4 அண்ணல்வாயில் | 6-71-7 | புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல். |
| 5 அத்தமனமலை | 6-71-9 | விளக்கமில்லை |
| 6 அத்தீச்சுரம் | 6-71-8 | சிவசைலம் - ஆழ்வார் குறிச்சி புகைவண்டி நிலையத்திலிருந்து மூன்றுகல் தொலைவிலுள்ளது என்பர். திரு. செங்கல்வராய பிள்ளை. |
| 7 அயனிச்சுரம் | 6-71-6 | அம்பாசமுத்திரத்திற்கு அருகில் ஒருமைல் தொலைவில் |

| தலம் | பதிக எண் | இருப்பிடம் |
|---|---|---|
| | | உள்ள பிரமதேசம் என்பர். திருப்பனந்தாளில் அசனீச்சரம் என்று ஒரு கோயில் உண்டு. வடார்க்காடு வழுவூர் கோயில், அயனீச்சுரம் எனக் கல்வெட்டுக் குறிக்கிறது. இம் மூன்றில் எது என்று தீர்மானிக்க இயலவில்லை. |
| 8 அரணநல்லூர் | 6–7–7 | விளங்கவில்லை. |
| 9 அரிச்சந்திரம் | 6–51–10 | கும்பகோணத்தை அடுத்த பட்டீச்சுரத்திற்குவடதிசையில் அமைந்துள்ளது. |
| 10 அளப்பூர் | 6–51–3<br>6–70–4<br>6–71–4 | தரங்கம்பாடி புகைவண்டி நிலையம். |
| 11 ஆடகேச்சுரம் | 6–71–8 | திருவாரூர்க் கோயிலுக்குள் 'நாகபிலம்' என வழங்கும் ஆலயம் என்பர். திரு. ரா. பி சே. |
| 12 ஆழியூர் | 6–70–7 | கீழ்வேளூருக்கும்- சிக்கலுக்கும் இடையில் உள்ளது. |
| 13 ஆன்பட்டி (பேரூர்) | 6–7–10 | கோயமுத்தூருக்கு அருகில் உள்ளது. |
| 14 இடவை | 6–70–3 | 'இராசேந்திர சிங்கவள நாட்டு, மண்ணி நாட்டு இடவை' எனக் கல்வெட்டுக் குறிக்கிறது. |
| 15 இடைக்குளம் | 6–71–10 | ஆடுதுறைக்கு அருகில் 'மருத்துவக்குடி' என இன்றுவழங்குகிறது. |
| 16 இடைத்தானம் | 6–7–8 | விளங்கவில்லை. |
| 17 இராப்பட்டீச்சுரம் | 6–25–10 | கும்பகோணம் - திருவாரூர்ப் பெருவழியில் பெருவேளூருக்குத் தெற்கே, கரவீரத்திற்கு வடக்கு முகமாக அமைந்துள்ளது. |

| தலம் | பதிக எண் | இருப்பிடம் |
|---|---|---|
| 18 இளங்கோயில் | 6-71-5 | இடைக்கால வழிபாட்டிற்கென அமைத்துக் கொள்ளப்பெற்ற சிறுகோயில்கள் இளங்கோயில் என்றும் 'பாலாயம்' என்றும் வழங்கப்பெறும். |
| 19 இளமர் | 6-70-4 | விளங்கவில்லை. |
| 20 இரும்புதல் | 6-51-6 | தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் ஒருசிற்றூர் |
| 21 இறையான்சேரி | 6-70-4 | திருத்துறைப்பூண்டிக்கு அருகில் இறைவான்சேரி என்ற ஊர் உளது. காஞ்சிக்கு அருகிலும் இப்பெயர் கொண்ட ஊர் ஒன்று உளது. |
| 22 உஞ்சேனைமாகாளம் | 6-70-8 | உச்சயினி - வடநாட்டுத் தலம் தனித்த தலமன்று. திருஏடகத்திற்கு அடை மொழியாக வந்தது. |
| 23 உண்ணீர் | 6-7-7 | ஞாயிறு தோன்றும் மலை. பொதுவான குறியீடு. |
| 24 உதயமலை | 6-71-9 | கோடி உருத்திரர் பூசைசெய்த தலம். |
| 25 உருத்திரகோடி | 6-70-8 | காஞ்சியிலும் - திருக்கழுக்குன்றத்திலும் உள்ள தென்பர். |
| 26 ஊற்றத்தூர் | 6-70-10<br>6-71-4 | திருச்சி மாவட்டம் ஊட்டத்தூர் - ஊறைப்பதிற்றுப் பத்தந்தாதி' மகாவித்துவான் பிள்ளை அவர்களால் பாடப்பெற்றது. |
| 27 எச்சிலிளமர் | 6-70-4 | எச்சில் என்பது ஓர் ஊர் இளமர் என்பது ஓர் ஊர். |

தொடர்ந்து அடுத்த இதழில் வரும் ... ...

ஆதாரம்: பன்னிருதிருமுறை வரலாறு - முதல்பாகம்

திரு. க. வெள்ளைவாரணனர்.

தகவல்: இரா. செ.

# செய்திகள்

## ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

சந்தானுசாரியருள் மூன்ருமவராகிய ஸ்ரீ மறைஞானசம்பந்தரின் குருபூஜை விழா, உத்திர நட்சத்திரம் கூடும், இராட்சச ஆண்டு, ஆவணி 24-ஆம் நாள் (7—9—75) ஞாயிற்றுக்கிழமை அன்று தருமையாதீனத்திலும், சிதம்பரத்திலும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. காலை, தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சமயாசாரியர் - சந்தானுசாரியர்களுக்கும், சிதம்பரம் திருக்களாஞ்சேரி சிங்காரத் தோப்பில், திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருமூர்த்த ஆலயத்தில், ஸ்ரீ மறைஞான சம்பந்தருக்கும் அபிடேக ஆராதனைகளும் - சிறப்பு வழிபாடும், தருமையாதீனம் 26-வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் சிறப்பாக நிகழ்ந்தன.

மாலை 7-00 மணி அளவில், தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்புமுதல்வர், திருநெறிச்செம்மல், தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர். பி. ஏ., அவர்கள் ஸ்ரீ மறைஞானசம்பந்தர் அருள் வரலாறு பற்றியும், சிதம்பரம் கனகசபை நகரில் உள்ள, தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர், வித்துவான் - திரு க. வெள்ளைவாரணனுர் அவர்கள் 'வினு வெண்பா' பற்றியும் சிறப்புச்சொற்பொழிவாற்றினர். அன்பர்கள்பலர் ஸ்ரீமறைஞான சம்பந்தரை வழிபட்டும், சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## ஸ்ரீ அருள்நந்திதேவர் குருபூஜை விழா

சந்தானுசாரியருள் இரண்டாமவராகிய ஸ்ரீ அருள்நந்தி தேவர் குருபூஜை விழா பூர நட்சத்திரம் கூடும், இராட்சச ஆண்டு, புரட்டாசித் திங்கள் 17-ஆம் நாள் (3—10—75) வெள்ளிக்கிழமையன்று தருமையாதீனத்திலும், திருத்துறையூரிலும் சிறப்பாக நிகழ்ந்தேறியது. காலை, தருமையாதீனம் ஸ்ரீ ஞான புரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சமயாசாரியர்

சந்தானாசாரியர்களுக்கும், நண்பகல், திருத்துறையூர் ஸ்ரீ சிஷ்ட குருநாதேசுவரர் திருக்கோயில் சந்நிதியில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள ஸ்ரீ அருள்நந்திதேவ நாயனார் குருமூர்த்த ஆலயத்தில், ஸ்ரீ அருள்நந்தி தேவருக்கும் அபிடேக ஆராதனைகளும் – சிறப்பு வழிபாடும் சிறப்புற நடைபெற்றன.

தருமையாதீனம் 26-வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம், தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் மாலை 7–00 மணி அளவில், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ., அவர்களும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர், திரு. வே. கண்ணப்பன் அவர்களும் முறையே 'சிவஞானசித்தியர்', 'இருபா இருபஃது' என்னும் தலைப்புக்களில் விரிவுரையாற்றினர். அதே நேரத்தில் திருத்துறையூர் ஸ்ரீ சிஷ்ட குருநாதேசுவரர் திருக்கோயிலில், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் பி. ஏ., அவர்கள் 'சிவஞான சித்தியர்' என்ற பொருள் பற்றியும், திருவதிகை வித்துவான் திரு. சண்முக சுந்தர தேசிகர் அவர்கள் 'அருள் நந்தி தேவர் அருள் வரலாறு' என்ற பொருள்பற்றியும் திரு-வதிகை அப்பர் இல்லம், வித்துவான் திரு. இரா. சண்முகசுந்தரஞ்செட்டியார் அவர்கள் 'இருபா இருபஃது' என்ற பொருள் பற்றியும் சிறப்புரையாற்றினர். திரளான அன்பர்கள் கண்டும் கேட்டும் – தரிசித்தும் உய்தி பெற்றனர்.

### தருமையாதீனத்தில்

## ஆவணி மூலப் பெருவிழா

தருமை ஆதீன ஆவணிமூலத் திருநாளும், ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழாக்களும், 11, 12, 13–9–75 வியாழன் வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களும் தருமை ஆதீனத்தில் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

11–9–75 வியாழனன்று முதல்நாள் நிகழ்ச்சிகள் 'கந்தபுராணத் திருநாளா'கக் கொண்டாடப் பெற்றது. தருமை ஆதீன அருளாட்சியில் தழைக்கும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி இவற்றின் ஆண்டு விழாவும் முதல் நாளன்று நடைபெற்றது. வித்துவான் திரு. ம. வே. கண்ணப்பன். அவர்களும், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும் கந்தபுராணத்திலிருந்து

'அமரர் சிறை மீட்ட அறுமுகன்' வரலாற்றையும், 'வள்ளி – தெய்வயானை திருமண' வரலாற்றையும் முறையே விரித்துரைத் தனர்.

12—9—75 வெள்ளியன்று இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 'பெரியபுராணத் திருநாளா'கக் கொண்டாடப் பெற்றது. தருமையாதீனத் தேவாரப் பாடசாலை, வேத – சிவாகம பாட சாலைகளின் ஆண்டு விழாவும் இரண்டாம் நாள் நடைபெற்றது. வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் பி. ஏ., அவர்களும் வித்துவான் திருமதி. ப. நீலா அவர்களும் முறையே 'குருபக்தி– இலிங்க பக்தி' 'சங்கம பக்தி' பற்றிப் பெரியபுராண அடிப் படையில் சொற்பொழிவாற்றினர்.

13—9—75 சனிக்கிழமையன்று ஆவணிமூலத் திருநாள் சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனம் 26 வது குருமகாசந்நி தானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஆன்மார்த்த மூர்த்தியாகத் திகழும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமானுக்கு விசேட அபிடேக ஆராதனை களோடு–சிறப்பு வழிபாடு நிகழ்த்தி, அன்பர்களுக்குப் பிரசாதங் கள் வழங்கியருளினார்கள். விழா மலராக 'ஸ்ரீ புவனாம்பிகை கலைஞானதீபம்' என்னும் நூல் கருத்துரையுடன் வெளியிடப் பெற்றது.

மாலை-7-00 மணி அளவில் வழிபாட்டிற்குப்பின், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் சந்நிதியில், மதுரைத் தியாகராயர் கல்லூரிச் சித்தாந்தப் பேரா சிரியர் திரு. அ. சங்கர நாராயணன் எம். ஏ., எம். லிட்., பி. டி., அவர்களுக்குச் 'செந்தமிழ்ச் சிவநெறிச் செம்மல்' என்ற பட்ட மளித்துப் பொன்னாடை போர்த்தி ஆசியருளினார்கள். பின்னர் இரவு 8-00 மணி அளவில் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத் தில் மூன்றும்நாள் நிகழ்ச்சிகள் 'திருவிளையாடல் திருநாளாக'க் கொண்டாடப் பெற்றது ஆதீனப் பல்கலைக் கல்லூரி, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவு சைவ – சித்தாந்தக் கல்லூரி இவற்றின் ஆண்டு விழாவும் நடைபெற்றது.

தருமையாதீனம் 26 வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி அன்பர்களிடையே, ஆவணிமூலத் திருநாளில் பல்துறை அறிஞர்களுக்குச் சிறப்பு பட்டம் வழங்கிவருதல் பற்றி எடுத்துரைத்து ஆசியுரை வழங்கி யருளினார்கள். (ஆசியுரை, தனியே இவ்விதழில் வெளியிடப் பெற்றுள்ளது.) ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டறிக்கை

கள் படிக்கப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிறப்புத் தகுதி பெற்ற மாணவ மாணவியர்க்குத் தங்கப்பதக்கம், ரொக்கப் பரிசுகள் நூற்பரிசுகள் முதலியவற்றை வழங்கியருளினார்கள். பின்னர், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப்பேராசிரியர் திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ, அவர்கள் 'ஆலவாயண்ணலின் அருள் விளையாடல்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். 'செந்தமிழ்ச் சிவநெறிச் செம்மல்' என்ற பட்டம் பெற்ற திரு. அ. சங்கரநாராயணன் அவர்களும், அவர்தம் துணைவியார் திருமதி. அனுசூயா அம்மையாரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பெருங் கருணைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர். வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள் 'குருஞானசம்பந்தர் அருள் வரலாற்'றை வில்லிசையாக நிகழ்த்தினர். மூன்று நாளும் கல்வி நிலைய மாணவ – மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

## தருமையாதீனம், ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலில் சதசண்டி வேள்வி விழா

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலில் 5—10—75 ஞாயிறு முதல் உலக நலங்கருதி 25 ஆவது சதசண்டி வேள்வி விழா சிறப்பாக நடைபெற்றது. 3—10—75 வெள்ளிக்கிழமை கணபதி ஹோமமும், 4—10—75 சனிக்கிழமை யஜமான அனுக்ஞை, தேவி அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் முதலியனவும் நிகழ்ந்தன. 5—10—75 ஞாயிற்றுக்கிழமை கடஸ்தாபனத்துடன் சதசண்டி வேள்வி தொடங்கப்பெற்றது. வேள்வி நாள் தோறும் காலை மாலை இருவேளைகளிலும் நடைபெற்றது. 7—10—75 செவ்வாய்க் கிழமை இரவு ஸ்ரீ துர்க்காதேவி சந்நிதியில் தீபபூஜை (ஒன்பது குத்துவிளக்குகளில் நவ துர்க்காதேவி ஆராதனை) நிகழ்த்தப் பெற்றது. 10—10—75 வெள்ளிக்கிழமை மாலை, வில்லாபிமந்த்ரணமும் (வில்வதருவில் மகாலக்ஷ்மிபூஜை) இரவு சதசண்டி வேள்விச்சாலையின் முன்னர் தீபபூஜை (ஒன்பது குத்துவிளக்குகளில் நவதுர்க்காபூஜை)யும் சிறப்பாக நடைபெற்றன.

11—10—75 சனிக்கிழமைகாலையில் நவபத்திரிகாக்ரஹணமும் (கதலி, தாடிமம், தான்யம், ஹரித்ரா, மானி, கலி, வில்வம், ஜயந்தீ அசோகம் என்ற தெய்வீகச் செடிகளில் ஒன்பது தேவி சக்திகளைப் பூஜித்து வழிபடுதல்). 12—10—75 அன்று அஷ்டாதச ஆயுதமண்டலபூஜையும், 13—10—75 திங்கட்கிழமை சோபனத்

திரவியசமர்ப்பணத்துடன் பூர்ணாகுதிதீபாராதனையும் 14–10–75 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு சதசண்டி வேள்விக்கலச அபிஷேகம், தீபாராதனை முதலியனவும்சிறப்பாக நடைபெறும்.

நாள்தோறும் ஸ்ரீ துர்க்காம்பிகை சந்நிதியில் காலை மாலை இருவேளைகளிலும் சுவாசினி குமாரி வடு பூஜை, சதுர் வேத பாராயணம், துர்க்கா சூக்தபாராயணம், திருமுறைப்பாராயணம் அபிராமி அந்தாதி பாராயணம் முதலியன நடைபெற்றன. நவராத்திரி விழா நாட்களில் உலக நலங்கருதி ஸ்ரீ துர்க்காம் பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நவசக்தி அர்ச்சனை ரூபமாக லட்சார்ச்சனையும், ஸ்ரீ வித்தியாசக்ரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனையும் நடைபெற்றன.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இரு வேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசி அருளினார்கள். இரவுவழிபாட்டின்போது பூர்ணாகுதி நிறைவில் ஆனந்ததாண்டவபுரம் பிரமஸ்ரீ ராமதாச அய்யர் அவர்களால் தேவிபாகவத விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

## திருநின்றியூரில் நாற்பெரும் விழாக்கள்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருநின்றியூர் அருள்மிகு உலகநாயகி அம்மை உடனுறை, அருள்மிகு. லட்சுமி புரீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 8—9—75 திங்கட்கிழமை மாலை, இரண்டாவது லட்சார்ச்சனை நிறைவு விழா, நாள் வழி பாட்டு வைப்பு நிதித் தொடக்கவிழா, திருநந்தனவனத் தொடக்க விழா, மின்விளக்கு ஏற்றுவிழா ஆகிய நாற்பெரும் விழாக்களும் மிக்சிறப்பாக நிகழ்ந்தன.

திருமகள் வழிபட்டுச் சிறந்த திருநின்றியூரில் தருமை யாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின்வண்ணம், உலக நலம்கருதி 7—7—75 அன்று தொடங்கிவைத்தருளிய லட்சார்ச்சனை, அன்பர் பலரது பக்தி யினாலும், ஈடுபாட்டினாலும் ஒரு லட்சத்திற்குமேலும் நடந்தேறி 8—9—75 திங்கட்கிழமையன்று இரண்டாவது லட்சார்ச்சனை நிறைவுபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்கள்புடைசூழ எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள்.

இத்தலத்தில் நாள் வழிபாடு முட்டின்றி நடைபெற, அன்பர்கள் ஒவ்வொருவரிடமும் ரூபாய் 360 வீதம் 365 அன்பர்களிடையே காணிக்கையாகப்பெற்று, அதனை நிரந்தர வைப்பு நிதியாகக் கொண்டு, அதிற்கிடைக்கும் வட்டித்தொகையினை நாள்வழிபாட்டிற்குப் பயன்படுத்துவது என்ற அடிப்படையில் அமைக்கப்பெற்ற இத்திட்டத்தின் தொடக்க விழாவும் அன்று மாலை திருக்கோயிலில் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், நாள்வழிபாட்டு வைப்புநிதித் திட்டத்தைத் தொடங்கி வைத்து அன்பர்களிடையே அருளாசி வழங்கியருளினார்கள். ஐம்பதிற்கும் மேற்பட்ட அன்பர்கள் தொகை செலுத்தி இத்திட்டத்தில் இணைந்தனர்.

திருக்கோயிலில் புதிதாக திருநந்தளவனம் அமைக்கும் முயற்சியில் பூச்செடிகள் நடுவிழாவும் நடைபெற்றது. குடந்தை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர், திரு. என். சீனுவாசன் பி. ஏ., பி. எல்., அவர்கள் பூச்செடிகள் நட்டு, திருநந்தனவனத் தொடக்க விழாவை ஆரம்பித்து வைத்தார்கள்.

திருக்கோயிலுக்குப்புதிதாக மின் இணைப்புச்செய்விக்கப்பெற்றது. மின் விளக்கு ஏற்றும் விழாவை மாயூரம் ஆர். டி. ஓ. திரு. ஆர். வீரராஜு அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இந்நாற்பெரும்விழாவில் நூற்றுக்கணக்கான அன்பர்கள் பங்கேற்று வழிபட்டும், நாள் வழிபாட்டு வைப்பு நிதித் திட்டத்தில் பங்கேற்றும் திருவருள் பெற்றனர். வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள்.

### தருமையாதீனத் திருக்கோயில்களில்

## நிறைபணி விழா

புரட்டாசித்திங்கள், பௌர்ணமிநாளில் சிவபிரானுக்கும், அம்பிகைக்கும் செய்யப்பெறும் ஏகதின உற்சவம் நிறைபணி விழா எனப்படும். இத்திருநாளில் சந்நிதியைச் சிறப்புற அலங்கரித்து இறைவற்கும் இறைவிக்கும் விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்துதல் சிறப்பாகும். இறைவனுக்கு அபிடேக அலங்காரங்கள் நிறைவுறச் செய்யப்பெறும் இவ்விழா நிறைபணி எனப்படுகிறது. இதனை நிகழ்த்தின் நினைத்த காரியங்கள் கைகூடுவதுடன், செல்வச் செழிப்பும் ஏற்படும். மறுமைக்கு வீடுபேறு கிட்டும். உலக மக்கள் நன்மை அடைவர்.

இத்தகுசிறப்புவாய்ந்த விழாவினைத், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், உலக நலங்கருதி 20—9—75 சனிக்கிழமையன்று ஆதீன அருளாட்சிக்குட்பட்ட ஆலயங்களில்

சிறப்புற நடைபெறத் திருவுளம் பாலித்தார்கள். முறையாக ஆதீனத்திருக்கோயில்கள் பலவற்றிலும் நடைபெற்ற நிறைபணி விழாவில் ஆங்காங்கே அன்பர்கள் திரளாகக் கலந்துகொண்டு வழிபட்டு உய்ந்தனர்.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் ஆகஸ்ட் மாத வழிபாடு சென்னை சைதாப்பேட்டை செட்டித் தெருவிலிருக்கும் ஸ்ரீ தேவி காமாட்சி அம்மன் ஆலயத்தில் 31—8—75 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. வழிபாட்டின் போது நிலையத் திருமுறை ஆசிரியர் திரு. S. ஞானப்பிரகாசமும் திருமுறை வகுப்பு மாணவ மாணவியரும் திருமுறைப் பாடல்கள், அபிராமி அந்தாதி, திருப்புகழ்ப் பாடல்களைப் பாராயணம் செய்தனர்.

அபிஷேக ஆராதனைக்குப் பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திரு. M. R தாமோதரன் நிலையத்தின் சார்பாக எல்லோரையும் வரவேற்றார்கள். திரு. N. R. முருகவேள் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். அடுத்து திரு. V. N. ஆறுமுகம், அவர்கள் விரிவுரையாற்றும் போது மனம் மாசுமறுவற்றுத் தூய்மையாய் விளங்கினால் நம் உள்ளத்தில் இறைவன் குடிகொண்டு விளங்குவான். ஆகவே நாம் மனத்திலுள்ள குற்றங்களை நீக்கி உயர்வு பெறுவோமாக, என்று கூறினார்கள். திரு. N. R. முருகவேள் தமது தலைமையுரையில், இங்கு அருள்மிகு காமாட்சி அம்மையை இன்றுவழிபடுகிறோம், காமாட்சி' என்னும் சொல்லில் 'கா' என்பது கலைமகளையும், 'மா' என்பது திருமகளையும் குறிக்கும். இவ்விருவரையும் ஆட்சி செய்து உலக உயிர்களுக்கெல்லாம் அருள்மாரி பொழிபவள் என்பது பொருள். ஆகவே காமாட்சி அம்மையை வழிபடுவதால் கல்விச் செல்வமும், பொருட் செல்வமும், அருட் செல்வமும் ஆகிய முச்செல்வங்களையும் முழுமையாகப் பெற்றவராவோம் என்று கூறினார்கள். பின்னர் தேவஸ்தான அறங்காவலர் நன்றிகூற, கடவுள் வாழ்த்துடன் விழா நிறைவுற்றது. விழாவிற்கு சுமார் 75 அன்பர்களுக்கு மேல் வந்திருந்து வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## நவராத்திரி விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 5—10—75 ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி,

மாண்புமிகு. V. சேதுராமன் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்து "அபிராமி அந்தாதி" அம்மை வழிபாட்டுக்குரிய சிறந்த பாராயண நூல். பம்பாயிலும், கல்கத்தாவிலும் இருந்த போது இதனைப் பாராயணம் செய்து பயன் பெற்றேன். இந் நூற்பொருளை எல்லோரும் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் தக்கவர்களைக் கொண்டு பேருரை ஆற்றச் செய்திருப்பது காலத்திற்கேற்ற சிறந்த சமயப்பணி என்று பாராட்டிப் பேசினார்கள். அடுத்து, டாக்டர். திரு. C. பாலசுப்பிரமணியம் அவர்கள் "அபிராமி அந்தாதி" பற்றித் தொடர் விரிவுரையாற்றினார்கள். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற நிலங்களின் பாகு பாட்டையும் அவற்றிற்குரிய தெய்வங்களையும் கூறி, பாலைவனத் திற்குரிய தெய்வம் "காடுகிழாள்" என்றும் அதை துர்க்கை, கொற்றவை என்ற பெயரில் முன்னோர் வழிபட்டனர் என்றும் கூறி அபிராமி அந்தாதிப் பாடல்களுக்கு விளக்கவுரை கூறினார் கள். விளக்கவுரை நாள்தோறும் நடைபெற்றது.

பின்னர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. S. மகராஜன் அவர்கள் விழாவில் கலந்துகொண்டு அன்னையின் பெருமையைப் பாடல் ஒன்று பாடி விளக்கினார்கள்.

6—10—75 அன்று திரு. R தண்டபாணி அவர்கள் (P. A. to Commissioner H. R & C. E. (Adm) Department) தலை மையில் விழா சிறப்புற நிகழ்ந்தது. 'தருமை ஆதீனம் தமிழிற்கும் சைவத்திற்கும் சிறந்த தொண்டு செய்து வருகிறது. சைவத்தின் கோட்பாடுகளை – கொள்கைகளை சைவ அன்பர்களுக்கு எடுத்து ரைக்கவே ஆங்காங்கும் பிரசார நிலையங்கள் எழுப்பி பிரசாரப் பணியைச் செய்து வருகிறது. நவராத்திரி விழாவில் நல்லன எல்லாம் தருபவளாகிய அன்னை அபிராமியை வணங்கி அபிராமி அந்தாதியைப் பாராயணம் செய்தால் நற்பேறு கிட்டும்' என்று தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

7—10—75 அன்று முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. R. சதாசிவம் அவர்கள் தலைமையில் விழா நிகழ்ந்தது. 'தருமையா தீனம் சென்னையில் நல்ல சமயப்பணி செய்துவருகிறது; அழைப் பிதழில் கொடுத்துள்ள விளக்கம் பலரும் பயனடையுமாறு இருக் கிறது. வீரத்திற்காக துர்க்கையை கல்கத்தாவிலும், செல்வத்திற் காக இலக்குமியை பம்பாயிலும், கல்விக்காகக்கலைமகளை சென்னை யிலும் கொண்டாடுகிறார்கள்' என்று தலைமையுரையில் எடுத் துரைத்துள்ளார்கள்.

8—10—75 அன்று திரு. S M. சுப்பையா B.Sc B.L. அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது. அவர்கள் தமது தலைமையுரையில் அபிராமி அந்தாதி விரிவுரையின் மூலம் சமய உண்மைகள் தத்துவங்கள், இலைமறை காய்போல் மறைந்திருக்கின்ற சமயப் பண்புகள் விளக்கப்படுகின்றன. இதனால் சமய அறிவும் சமய உணர்வும் பெருகுகின்றன. இந் நவராத்திரி விழாவின் மூலம் தருமை ஆதீனம் நம்மையெல்லாம் அன்னை அபிராமியின் திருவருளைப் பெற ஆற்றுப்படுத்துகிறது என்று கூறினார்கள்.

9—10—75 அன்று நிகழ்ந்த விழாவிற்குத் தலைமையமர்ந்த முன்னாள் உயர் நீதி மன்ற நீதிபதி திரு. S மகராசன் அவர்கள் தமது தலைமையுரையில், தருமையாதீனத்தில் நம்மையெல்லாம் பக்தித் துறையில் ஈடுபடுத்தி அம்பிகையின் அருளை அடையச் செய்கிறார்கள். தன் முனைப்பு அற்று எல்லாம் அவள் செயலே என்று எண்ணி வாழ்கிறவர்கள் அம்மை அருளை எளிதில் பெற்று உய்கிறார்கள் என்று கூறி " ஓங்காரியென்பால் " என்ற பாடலுக்கு விளக்கம் செய்தார்கள்.

ஸ்ரீ அபிராமி அன்னையின் திருவுருவப் படத்திற்கு நாள் தோறும் சகஸ்ர நாமார்ச்சனை செய்து வழிபாடு நிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

## மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் இராட்சச ஆண்டு ஐப்பசித்திங்கள் 12 ஆம் நாள் ( 29 — 11 — 1975 ) புதன்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று தென்திருமுல்லைவாயில் ஸ்ரீ கோதையம்மை உடனுய ஸ்ரீ முல்லைவனநாதர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெறும். தலத் திருப்பதிகம் பாராயணமும், விரிவுரையும் நிகழும். தென்திருமுல்லைவாயில் திருப்பதிகம் என்ற நூல் வழங்கப்பெறும். அன்பர்கள் கலந்து கொண்டு வழிபட்டு இன்புறுவார்களாக.

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( ஸ்ரீ இராக்ஷஸஸு ஐப்பசிமீ 1௳ முதல் 30௳ முடிய )

( 18—10—75 முதல் 16—11—75 முடிய )

ஸ்ரீ இராட்சஸ ஸு ஐப்பசி மாதம் 1 ௳, துலா விஷுபுண்ய காலமாகும். ஸ்ரீ இராட்சஸ ஸு புரட்டாசி மீ 31௳ சுக்கிரவாரம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 49 நாழிகைக்கு கடக லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சத்தை முன்னிட்டு, துலாராசி சங்கிரமண மாக ஸ்ரீ இராட்சஸ ஸு ஐப்பசி மாதப் பிரவேசம் செய்கிறார். ரஸாதிபதி சனியாகிறார். இம்மாதம் மற்றைய கிரகங்களின் ஸ்திதியால் பருத்தி, ஜவுளி, புகையிலை, முத்துக்கொட்டை, மணிலா, எள், கருப்பூரம், வெல்லம், நவதான்யங்கள் முதலிய பொருள்களின் விலைவாசி ஸ்திரமாகும். மிளகாய் சணல் விலை ஏறும். தேசங்களில் எங்கும் புதிய தொழில் நிறுவனங்கள் ஏற்பட்டு பிரஜைகள் பூரண உழைப்புடையவர்களாகத் திகழ்வார்கள். சகல குடிமக்களும் சுக ஜீவன மேன்மையுடன் விளங்குவார்கள். உலகிலுள்ள எல்லா தர்ம ஸ்தாபனங்களும் இயங்கும். திருமடங்கள், ஆசாரிய பீடங்கள், ஆஸ்திக சங்கங்கள் தழைத்து அவற்றின் கர்த்தாக்களான புண்ணியசீலர்கள் சைவசமய பிரசாராதி திருத்தொண்டாற்றவும், அருந்தவத்தோரால் வேதபிராமணர்களால் யாக யக்ஞங்கள், வேத பாராயணங்கள் பலவாக நிகழ்த்தவும் அனுக்கிரகமாகி, லோகமெங்கும் சுபிட்சம் ஏற்படும். ஆஸ்திக திருச்சபைகள் ஆங்காங்கு ஏற்பட்டு பிரஜைகள் தெய்வீக உணர்வுடன் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். சுபச்செலவுகள் மிகும். பூமி இயந்திர வாகனத்

தில் ஆதாய பிராப்தியும் சமச்செலவுமாக இருக்கும். இம்மாதம் 13, 14 தேதிகள் தவிர மற்றகாலம் சுபம் அதிகரிக்கும். சந்திர பலனுல் 25, 26,27 தேதிகளில் இலட்சுமீகரமான நல்ல ஆதாய பிராப்தியை உண்டுபண்ணும். எல்லாக் காரியங்களிலும் மேன்மை ஸ்திதி ஏற்படும். சனி ஞாயிறு சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷப ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். தன ஆதாயசௌகரியங்கள் இருந்துவரும். தொழில் அல்லது ஜீவனோபாய விஷயத்தில் மேலிடத்தாரால் நன்மை ஏற்படும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மேலிடத்தாரின் இரகசிய காரியங்களில் மனம் தீவிரமாகும். ஓர் தீர்த்த யாத்திரை செய்ய நேரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுன ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரான பலனாக நடக்கும். தன வசதி திருப்திகரமாக இருந்து வரும். ஆடை, ஆபரணச்சேர்க்கை, வாகன சௌகரியம், விவசாயத்தில் விருத்திகரம் முதலான நற்பலன்கள் பெருகும். சத்துருவினுல் ஓர் விவாதமுண்டாகி நீங்கும். இருமல் வயிற்றுவலி போன்றநலிவுகள் வந்துநீங்கும். சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரமான பலனாக நடக்கும். தனச்செலவு அதிகமாகும். குடும்ப சம்பிரதாய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சிரமம்போல் தோன்றும். ஆயினும் குரு சுக்கிர நிலைமை எல்லா விஷயங்களையும் கண்யத்துடன் நிறைவேற்றும். ஞானமார்க்க சிந்தனை தெய்வ கைங்கரியங்கள் முதலியவற்றில் கேதுவின் குணம் மிகுந்து காணும். ஓர் ஸ்தல யாத்திரையை உண்டுபண்ணும். வெள்ளி சனி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மெ. – மோ. டா. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். தனவிருத்தியையும், ஜீவன மேன்மையையும் அளிக்கும். பூர்த்தியாகாத எந்தவிதகாரியமும் சுலபமாக முடிவு

பெறும். தருமகாரியங்களும், தெய்வ கைங்கரியங்களும் உறுதியுடன் செயல்படும். சிவந்த பொருள் பிராப்தியை உண்டுபண்ணும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். அவசியமற்ற தனச் செலவு மிகுந்து காணும். புத்திரருக்கு ஓர் விபத்துவந்து நீங்கும். தாம்பத்திய வாழ்க்கை பரஸ்பர நிலைமையாக இருந்துவரும். ஜீவன விஷயத்தில் கடும்போக்கும் சாமர்த்தியமாக சமாளிப்பதுமாகும். எடுத்த காரியங்கள் சிரமசாத்தியமாயினும் கண்யம் நிலவும். செவ்வாய், புதன் சுபமாகும்

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனம் வரவும் செலவும் சரிசமமாக இருந்துவரும். மனைவிக்கு இரத்த பித்த மயக்கக் கோளாறும், பிதாவுக்கு ஓர் விபத்தும் வந்து நீங்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌகரிய மேன்மை ஒருவிதத்தில் திருப்தியளிக்கும். எல்லாக் காரியங்களிலும் மந்த நிலைமையாயினும் அனுகூலம் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

( தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். தனச்செலாவணி பெருமதிப்புடன் இருந்துவரும். நீலக்கல் பதித்த ஆபரண பிராப்தி உண்டாகும். இயந்திர வாகனங்களின் சௌகரியங்களும், சகோதரர், மனைவி, புத்திரர்களின் சௌக்கியமும் மகிழ்ச்சியளிக்கும். தொழில் அல்லது உத்தியோகத்தில் சிறப்புமேலிடும். எல்லாக் காரியங்களும் மதிநுட்பமாகவும் துரிதமாகவும் நடைபெறும். சனி, ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

( யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனவசதி சீராக இருந்துவரும். சகோதரர் குடும்ப விஷயத்தில் ஓரளவு திருப்திகரமான நிலைமையாக

இருந்துவரும். சப்தமகேந்திரத்திலுள்ள செவ்வாய் அடிக்கடி விபத்துக்களையும், புத்திரகிலேசத்தையும் ஏற்படுத்தும். விவகாரங்களில் – ஜீவன விஷயத்தில் அதிருப்தியான நிலைமையாக இருக்கும். இடையில் சில ஆதாய பிராப்தியையும் உண்டுபண்ணும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – க. கி.)

மகரராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபமான பலனைத்தரும். தனம் கௌரவத்துடன் வந்துசேரும். வித்துவத்திலும் செய்தொழில்களிலும் பிரசித்தம் ஏற்படும். மதிநுட்ப சாதனங்களை கையாளும் அந்தஸ்துவரும். ஓர் தீர்த்தயாத்திராடனம் சம்பவிக்கும். விவகாரம் ஜெயிக்கும். சிவந்த வஸ்துவின் பிராப்தி ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

### 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾

(கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனவசதி பெருமதிப்புடன் இருந்துவரும். சகோதரரின் தொழில் இருப்பிடம் ஆகியவற்றில் திடீர்மாற்றத்தை உண்டுபண்ணும். ஜீவனோபாய தொழில் விஷயத்தில் மேலோரால் சகாயம் இருந்துவரும். பிதா சொத்து வீடு இவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும். புத்திரருக்கு ஓர் விபத்து வந்து நீங்கும். எல்லாக் காரியங்களும் தெய்வபலத்தால் சித்தியாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

(தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக இருக்கும். தன ஆதாய சௌகரியம் சீராகவும் வாக்கு கௌரவம் மிச்சிரமானதாகவும் இருக்கும். பிறர் புறம்பேசுதல் காதில் விழும். தொழில் துறை உத்தியோகத்தில் கடியபோக்காயினும் உறுதிப்பாடுடையதாகும். தாம்பத்தியவாழ்க்கையில் மனோவேக போக்கும் உடன் அனுசரணையும் ஏற்படும். புத்திரர் புத்திரிகள் சௌக்கியத்துடன் இருப்பார்கள். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.